கீழ்த்திசை அப்போஸ்தலர்

பிஷப் ஹீபர்

தொகுப்பாசிரியர்கள்
Dr. J. செல்லப்பா Ph.D., & Dr. S. லலிதா செல்லப்பா Ph.D.

வெளியீடு:
நெல்லை, தூத்துக்குடி-நாசரேத் திருமண்டல
68வது பெணகள் ஜெப ஐக்கிய கன்வென்சன்,
திருச்சி (3.5.2013)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

பிஷப் ஹீபர்

(வாழ்க்கை வரலாறு)

தொகுப்பாசிரியர்

Dr. J. செல்லப்பா Ph.D.

Dr. S. லலிதா செல்லப்பா Ph.D.

(திருச்சி)

வெளியீடு

நெல்லை-தூத்துக்குடி-நாசரேத் திருமண்டலம்

கிறிஸ்தவ பெண்களின் 68ஆவது

ஜெப ஐக்கிய கன்வென்ஷன்

திருச்சி

03,05,2013

CHURCH OF SOUTH INDIA
**TIRUCHIRAPALLI-
THANJAVUR DIOCESE**
Dioceson Office, Puthur, Tiruchirapalli - 627 017

Rt.Rev.Dr.G.Paul Vasanthakumar
Bishop

Phone : 0431-2771254 (Off)
: 0431-2770172 (Per)
Fax : 0431-2418485

அணிந்துரை

"கோதுமை மணியானது நிலத்தில்விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்; செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும்" என நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார். ஆண்டவருக்காக இறையரசுக்காக திருச்சி மண்ணில் கோதுமை மணியாக விழுந்த பேராயர் ரெஜினால்ட் ஹீபர். அந்த விதை மண்ணில் விழுந்து மடிந்தாலும் அதனால் விளைந்த பயிர் மாபெரும் அறுவடையை தந்துள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்திற்கு அன்று ஒரே பேராயராக விளங்கிய ரெஜினால்ட் ஹீபர் தென்னிந்தியப் பகுதியில் இருந்த திருச்சபைகளைப் பார்வையிடுவதற்காக வந்து திருச்சியில் சில நாட்கள் தங்கி இருந்தார். கடுமையான கோடை காலம் அது; சுட்டெரிக்கும் வெயிலைப் பொருட்படுத்தாது அவர் திருப்பணியாற்றினார். 1826ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 3ம் நாள் திருச்சி மலைக்கோட்டை பகுதியில் உள்ள கிறிஸ்துநாதர் ஆலய வளாகத்தில் தம் கடைசி அருளுரையை ஆற்றினார். இன்று மாவட்ட நீதிமன்றம் அமைந்துள்ள வளாகத்தில் அன்று இருந்த நீதிபதியின் இல்லத்தில் பகல் உணவுக்கு முன் ஒரு சிறு நீச்சல் குளம் போல் அமைந்திருந்த குளியல் தொட்டியில் மூழ்கி இறந்தார்.

பிஷப் ஹீபரின் மறைவு அன்று திருச்சி மாநகரையே சோகத்தில் ஆழ்த்தியது. தூய யோவன் ஆலய திருப்பீடத்தின்கீழ் உயிர்தெழுதலின் நம்பிக்கையோடு நல்லடக்கம் செய்யப்பட்டார். பிஷப் ஹீபர் கல்லூரி, தெப்பக்குளம் மற்றும் புத்தூர் பிஷப் ஹீபர் பள்ளிகள், ஹீபர் சாலை என திருச்சி மாநகரம் இன்றும் அவரது நினைவைப் போற்றுகிறது.

இங்கிலாந்து நாட்டில் வேல்ஸ்க்கு அருகில் பிஷப் ஹீபர் பிறந்த மெல்பாஸ் என்ற ஊரையும், அவர் படித்த பள்ளியையும், ஹாட்நெட் என்ற ஊரில் அவர் திருப்பணியாற்றிய தூய லூக்கா ஆலயத்தையும், அவரது பூர்வீக இல்லத்தையும் பார்க்கும் வாய்ப்பைக் கடவுள் எனக்குக் கொடுத்தார். ஹீபர்-பெர்ஸி என்ற செல்வாக்கும், செல்வமும் மிகுந்த குடும்பத்தில் பிறந்தவர் பிஷப்-ஹீபர் அவரது இல்லத்தை சூழ்ந்திருந்த காடுகளினூடே நடத்து கொண்டேதான் அவர் பல பாமாலைகளையும், பாடல்களையும் இயற்றினார். தூய தூய தூய... என்ற ஆண்டவரின் புகழ் பாடலும் அவ்வாறு எழுதப்பட்டதுதான். அங்கு பிஷப் ஹீபரின் கொள்ளு பேத்தியின், கொள்ளு பேரனின் குடும்பத்தைச் சந்தித்தேன். பிஷப் ஹீபர் இறந்த செய்தி 5 மாதங்களுக்கு பின்னரே அவர் மனைவிக்கு கிடைத்தது என்பதை அறிந்த போது என் கண்கள் பனித்தன.

பேராசிரியர் முனைவர் செல்லப்பா அவர்களும் அவர்தம் துணைவியார் திருமதி. முனைவர் லலிதா செல்லப்பா அவர்களும் பிஷப் ஹீபர் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைத் தகுந்த ஆதாரங்களுடன் ஆய்வு செய்து நூலாக வெளியிடுவது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடவுள் தங்களுக்கு அளித்த ஞானவரங்களைக் கடவுளின் திருப்பெயரின் மாட்சிமைக்காக அவர்கள் பயன்படுத்தி பல நூல்களை எழுதியுள்ளனர். பிஷப் ஹீபர் வாழ்க்கையை விவரிக்கும் இந்நூல் படிப்போர் அனைவருக்கும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறேன். அவரது வாழ்க்கை விடுக்கும் அறைகூவல் பின்வரும் பல தலைமுறைக்கு வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. பேராசிரியர் செல்லப்பா, திருமதி. லலிதா செல்லப்பா இருவருக்கும் என் மனமுவந்த பாராட்டுக்கள். கடவுள் அவர்களை ஆசீர்வதித்து இவ்விலக்கியத் திருப்பணியில் மென்மேலும் அவர்களைப்பயன்படுத்தக் கடவுளை வேண்டுகிறேன். அவர்களுக்கு என் நன்றியும் வாழ்த்துக்களும் உரியன.

கடவுள் காலங்கள் தோறும் பிஷப் ஹீபர் போன்ற பக்தர்களைத் திருச்சபைக்குத் தருவாராக.

நாள்: 27.03.2013

ஞா. பால்வசந்தகுமார்
பேராயர்

Bishop's House, Post Box 31, No.17, VOC Road, Cantonment,
Trichy-620 001, Ph:0431-2411102, E-mail:csittd@rediffmail.com

The Church of South India
Tirunelveli Diocese
The Rt Rev Dr. JJ Christdoss
MA BD MTh DD
Bishop of Tirunelveli
Telefax : (+91) 0462 2574525
Telephone : (+91) 0462 2578744



BISHOPSTOWE
Post Box 118
16, North Highground Road
Palayankottai - 627 002
E-mail: bishop@csitirunelveli.org
Website www.csitirunelveli.org

2013, ஏப்ரல் 23

வாழ்த்துரை

"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை. அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது." 1கொரிந்தியர் 9:16.

பேராயர் ரெஜினால்ட் ஹீபர் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு புத்தகத்திற்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பெண்கள் ஜெப ஐக்கிய 68வது கன்வென்ஷன் கூட்டங்கள் திருச்சியில் நடைபெறுவதை முன்னிட்டு இப்புத்தகத்தை வெளியிடும் எண்ணத்தை கர்த்தர் உள்ளத்தில் கொடுத்ததற்காக தேவாதி தேவனை ஸ்தோத்தரிக்கிறேன்.

பேராயர் ஹீபர் அவர்கள் இங்கிலாந்து தேசத்தில் பிறந்தவராயினும், இந்தியாவை நேசித்து கர்த்தரின் அழைப்பிற்கு கீழ்ப்படிந்து, பெற்றோர், உற்றோரைப் பிரிந்து 1823ம் ஆண்டு இந்தியாவிற்கு வந்தார். "கர்த்தர் பார்த்துக் கொள்வார்" என்ற தாரக மந்திரத்தை தன்னகத்தே கொண்ட பேராயர் இந்தியாவில் ஆண்டவர் பேரில் நம்பிக்கை கொண்டு ஊழியம் செய்ய துவங்கினார். கல்கத்தாவில் தொடங்கிய ஊழியத்தை பின்னர் இந்தியாவின் தென்பகுதிகளிலும் குறிப்பாக தஞ்சை, திருச்சி, பகுதிகளில் சிறப்பாக நிறைவேற்றினார்கள்.

இறைப்பணியோடு சமுதாயப் பணியில் அதிக ஈடுபாடு கொண்ட பேராயர் ஹீபர் அவர்கள் ஜாதி, சதி போன்றவற்றை ஒழிக்க அரும்பாடுபட்டவர்கள். ஆதிவாசி மக்களின் அன்பை பெற்றவர்கள். "கீழ்த்திசை அப்போஸ்தலர்" என்று சிறப்பாக அழைக்கப்பட்டவர். திருச்சபையை நடத்த மிகவும் பிரயாசப்பட்டவர்கள். சிறந்த கவிஞர் எழுத்தாளர் பேராயர் ஹீபர் அவர்கள்.

தன்னுடைய தியாகமான வாழ்வை திருச்சபையின் தலைவர்களுக்கும், ஊழியர்களுக்கும் முன்மாதிரியாக விட்டுச் சென்ற பேராயர் ரெஜினால்ட் ஹீபர் அவர்களின் புகழ் பாரெங்கும் பரவட்டும். இச்சிறு புத்தகம் வாசிப்போரின் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் என்பதில் ஐயமில்லை. இப்புத்தகத்தின் ஆசிரியர்களைப் பாராட்டுகிறேன். பெண்கள் ஜெப ஐக்கிய கன்வென்ஷன் சிறப்பாக நடைபெற ஜெபிக்கிறேன்.

இறையாசி உங்களனைவரோடும் இருப்பதாக.

கிறிஸ்துவின் பணியில்

பேராயர்

Jesus, the humble suffering servant is the powerful conquering king and judge

Church of South India

THOOTHUKUDI - NAZARETH DIOCESSE

The Rt Rev Dr. J.A.D. Jebachandran,
MA B.G.L.,B.D.,DD.,
Bishop of Thoothukudi - Nazareth Diocese
Chairman TND & Manager, TND Colleges.
(Off.) 0461 - 2345430
Tele Fax : 0461 - 2346911
e-mail : bishoptndone@yahoo.com

Bishop's House,
111/32-T, State Bank Colony,
Thoothukudi - 628 002,
Tamilnadu, South India.
Web : www.csitnd.org

2013, ஏப்ரல் 23

அணிந்துரை

நெல்லை, தூத்துக்குடி - நாசரேத் திருமண்டல கிறிஸ்தவப் பெண்களின் ஜெப ஐக்கியத்தின் சார்பாக வெளியிடப்படும். பிஷப் ஹீபர் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலுக்கு அணிந்துரை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன். தூரக்காட்சியோடு இந்நூல் வெளிவருவதற்கு சிறப்பான முயற்சிகளை மேற்கொண்ட திருமதி. குளோரி செல்லத்துரை அவர்களையும், அனைவரும் விரும்பி படித்து பயனடையும் விதம் எளிமையான படைப்பாக இந்நூலை உருவாக்கிய ஆசிரியர்கள் Dr.J. செல்லப்பா, Dr.(Mrs)S. லலிதா செல்லப்பா அவர்களையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

கர்த்தரின் சித்தமும், மனிதனின் விருப்பமும் ஒன்றாகிவிட்டால் அவனே சிறந்த மனிதனாக இவ்வுலகில் பயன்படுவான் என்பதற்கினங்க தன்னுடைய சிறுவயது முதல் இறுதிவரை ஆண்டவருக்குப் பிரியமாய் வாழ்ந்து அநேக கவிதைகளையும், கட்டுரைகளையும், பாடல்களையும் எழுதி நல்ல குருவானவராகப் பணியாற்றி இங்கு நான் ஒரு போதும் திரும்பப் போவதில்லை என்று தன்னுடைய சொந்த ஊரை நோக்கி தீர்க்கத்தரிசனமாக கூறி 1823ஆம் ஆண்டு ஜீன் 1ம் தேதி இந்திய

தேசத்தின் பிஷப்பாக இங்கிலாந்து தேசத்தில் அபிஷேகம் செய்யப்பட்டு 1823ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் தேதி கொல்கத்தா வந்தடைந்து எவ்வளவு காலம் வாழ்கிறோம் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கிறோம் என்பதே முக்கியம் என்பதற்கினங்க ஆண்டவர் கொடுத்த காலத்தில் ஆண்டவருக்குப் பிரியமாகவும், ஊழியர்களுக்கு நல்ல மாதிரியாகவும், கிழக்கிந்தியக் கம்பெனியின் சிந்தனைக்கு மாறாக இந்திய மக்களின் தகுதியை உயர்த்தி அவர்களைப் பயனுள்ளவர்களாக மாற்ற சிறப்பாக முயற்சியெடுத்த சிறந்த சமுதாய சீர்திருத்தவாதியாக அர்ப்பணிப்போடு அருட்பணியாற்றி, கீழ்திசை அப்போஸ்தலர் என்று குருவானவர் தாமஸ் ராபின்சனால் சொல்லப்பட்டு அழைக்கப்பட்டு தனது 43வது வயதில் ஜீவ கீரிடத்தை சுதந்தரித்த பிஷப் ஹீபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல் அனேகருக்கு பயனுள்ளதாக விளங்கவும், இந்நூல் எழுதப்பட்டதின் நோக்கம் முழுமையாக நிறைவேறவும் ஆண்டவர் அருள்புரிவாராக.

கிறிஸ்துவின் பணியில்

பேராயர்

தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்

விடுதலை நிலையில் வாழ்வதற்கென அழைக்கப்பட்டீர்கள். ... அன்பினால் ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள். கலாத்தியர் 5:13

You are called to be free,.....

Let love make you serve one another. Galatians

CHURCH OF SOUTH INDIA

NELLAI & THOOTHUKUDI - NAZARETH DIOCESE

WOMENS PRAYER FELLOWSHIP

90-M, Allaluiah Illam,
Pothigai Nagar, Tirunelveli - 627 007,
Tamil Nadu, India. Phone : 0462 2551272

Office Bearers
Mrs. Christilda Christudoss, President
W/o. The Rt.Rev.J.J. Christudoss
Bishop, Tirunelveli Diocese
Mrs. Vasantha Balasekaran, Secretary
Mrs. Visithiral Jebachandran, President
Rev. Mrs. Eben Jason, Secretary
Thoothukudi - Nazareth Diocese
Mrs. Glory Chelladurai, Convenor

Mrs. Glory Chelladurai
Convenor

பொதிகைநகர்
23.04.2013

எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன் (பிலி.3:7).

பவுல் அப்போஸ்தலனைப் போலவே பிஷப் ஹீபர் இங்கிலாந்தில் அவருக்கு வர இருந்த மேன்மைகளையும், தனது திருச்சபைகளையும், மக்களையும், வயதான தனது தாயாரையும், தனது சகோதரியையும், தனது நாட்டையும், வீட்டையும் விட்டு, "தான் இனி ஒருபோதும் அங்குத் திரும்பப் போவதில்லை" என்பதைஉணர்ந்தவராய், ஆண்டவரின் அழைப்பிற்கு அடிபணிந்தவராய், இந்திய பிஷப்பாக இங்கிலாந்திலேயே அபிஷேகிக்கப்பட்டு இந்தியாவை நோக்கிப் புறப்பட்டார். அருட்பணியின் கிரையத்தை ஹீபர் நன்கு உணர்ந்திருந்தார்.

கொல்கத்தாவை வந்தடைந்த ஹீபர் கொலம்போ, பர்மா போன்ற இடங்களுக்கும் சென்று சபைகளை ஸ்தாபித்தார். நற்செய்தி இயக்கத்தைத் தொடங்கி வைத்தார். கல்லூரிகள், விடுதிகள், காப்பகங்கள் ஏற்படுத்தினார். சுவிசேஷ ஊழியம் வளர்ச்சி அடைந்தது.

சென்னைக்கு வந்த ஹீபர் சபைகளுக்கும், மிஷன் சங்கங்களுக்கும் உதவினார். சாதி பாகுபாடின்றி யாவருக்கும் ஒன்றாகவே திருவிருந்து கொடுக்கப்பட்டது. ஆதிவாசிகளை அன்புடன் முன்னேற்றினார்.

அதிக தூரம் பயணித்து கடலூர், பாண்டிச்சேரி, திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கும் சென்றார். அநேக பாடல்களையும் பாமாலைகளையும் இயற்றினார்.

கீழ்த்திசை அப்போஸ்தலன் என்று அழைக்கப்பட்ட ஹீபர் குறுகிய காலத்தில், பல ஆயிரம் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினார் ஊழியர்கள் பலரை எழுப்பி தேவனுக்காக மாபெரும் செயல்களைச் செய்தார்.

தேவனுக்காய் தீவிரமாய் ஓடின அவரை தேவன் தம்முடனே வைத்துக் கொள்ள வாஞ்சை கொண்டார். போலும், தமிழ் நாட்டில் திருச்சியில் ஹீபர் கோதுமை மணியாக விதைக்கப் பட்டார். அதன் விளைவாக கல்லூரிகளும், பாடசாலைகளும் அவர் நினைவாக மலர்ந்தன.

இத்துணை மேன்மையாக, தேவ பணியை நிறைவேற்றிய பிஷப் ஹீபர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை நூலாக வெளியிட கிருபை செய்த தேவனைத் துதிக்கிறோம். குறுகிய காலத்திற்குள் இப்புத்தகத்தினை மிகச்சிறப்பாக வடிவமைத்துக் கொடுத்த முனைவர். J. செல்லப்பா, திருமதி. லலிதா செல்லப்பா அவர்களுக்கும், இதனை எழுதும்படி ஊக்குவித்த என் கணவர் திரு. M. செல்லத்துரை அவர்களுக்கும் இயேசுவின் நாமத்தில் நன்றி கூறுகிறேன்.

பிஷப் ஹீபரைப் போல தேவனுக்காய் தீவிரமாக
செயல்படும் இளைஞர்களைத் தேவன் தேடுகிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரி

(குளோரி செல்லத்துரை)

கன்வீனர்

பெண்கள் ஜெபஜக்கிய கன்வென்ஷன்

ஆசிரியரிடமிருந்து...

அருட்பணியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதவேண்டும், மற்றவர்களும் எழுதும்படி கற்றுத்தர வேண்டும் என தீர்மானித்திருக்கும் எங்களுக்கு பிஷப் ஹீபரின் வாழ்க்கையை எழுதும்படி சகோதரி குளோரி செல்லத்துரை கேட்டபோது கரும்பு தின்ன கூலியா, என ஏற்றுக்கொண்டோம்.

பிஷப் ஹீபர் கல்லூரி நூலகத்தில் ஹீபரை பற்றிய பல (நூல்கள் ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்டவை) உள்ளன. அவைகளைப் படிக்க, நகல் எடுக்க எங்களுக்கு உதவிய கல்லூரி முதல்வர், நூலகர் மற்றும் டாக்டர். அல்லி சேகர் அவர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

ஹீபரின் வாழ்க்கை குறுகியது. ஆனால் அவர் ஆற்றிய செயல்கள் கடல் போன்றவை. எதை எழுதுவது, எதை விடுவது என எண்ணற்ற காரியங்களைச் செய்த செயல் வீரர் - விசுவாச வீரர் அவர்.

இதை எழுதுவதன் மூலம் நமது திருச்சபை வரலாற்றை திரும்பிப் பார்க்க எங்களுக்கும் தேவன் கிருபை செய்தார். நம் முன்னோடிகளின் சரித்திரத்தை, தியாகத்தை தெரிந்து வைத்திருப்போமானால், தேவராஜ்யம் விரிவடையும் என்பதில் ஐயமில்லை. இந்த எளிய படைப்புமூலம் இளையதலைமுறை விழிப்படைய, பயனடைய விரும்புகிறோம்.

Dr. ஜே. செல்லப்பா.
Dr. லலிதா செல்லப்பா.

பொருளடக்கம்

1, சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார் 1

2, இலக்கை நோக்கித் தொடர்கிறேன் 6

3, ஐரோப்பிய சுற்றுப்பயணம் 9

4, கர்த்தரின் சித்தம் என் போஜனம் 12

5, கவிஞர் ஹீபர் 15

6, தேவ அழைப்பும் - கீழ்ப்படிதலும் 23

7, கொல்கத்தாவில் பிஷப் ஹீபர் 31

8, இந்திய திருமண்டலத்தில் பிஷப் ஹீபர் 37

9, இறை பணிக்கென குருக்களை நியமித்தல் 42

10, தென்இந்தியாவில் சுற்றுப் பயணம் 48

11, மரணத்திற்குப்பின், , , , 64

12, References 67

பிஷப் ரெஜினால்ட் ஹீபர்



Monument to Bishop Reginald Heber by Sir Francis Chantrey.
Marble St.Paul's Cathedral, Calcutta, India

கல்கத்தாவில் உள்ள புனித பால் பேராலயத்தில்
பிஷப் ரெஜினால்ட் ஹீபர் நினைவு சின்னம்



தூய யோவான் ஆலயம், திருச்சி

தூய யோவான் ஆலய உள்தோற்றம், திருச்சி

அத்தியாயம் - 1

சின்னஞ்சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்

வீட்டுக்குப் பின்புறம் உள்ள தோட்டத்தில் மெதுவாக அடியெடுத்து வைத்துச் சென்று கொண்டு இருந்தான் எட்டு வயது ரெஜினால்ட் ஹீபர், அவன் கைகளில் ஒரு சிறு அணில் பிள்ளை பயத்துடன் கண்களை மூடி இருந்தது. பக்கத்தில் உள்ள மரத்தின் கிளை ஒன்றில் அந்த அணில் பிள்ளையை மெதுவாக வைத்தான். அந்த அணில் பிள்ளை கண்களைத் திறந்து, கண்களை உருட்டி அங்கும் இங்கும் பார்த்தது, சுதந்திரமான சூழலில் இருப்பதை உணர்ந்து ஒரே துள்ளாகத் துள்ளி மரத்தில் ஏறியது. கொஞ்சதூரம் சென்றதும் திரும்பிப் பார்த்து விடுதலை கொடுத்த இரட்சகனான ரெஜினால்டை நோக்கி நன்றியுடன் வாலைத் தூக்கிக் காட்டியபின் ஒரே ஓட்டமாய் ஓடி மறைந்தது. ரெஜினால்டுக்கு சந்தோஷம் தாங்கமுடியவில்லை.

ரெஜினால்டு இயற்கையை நேசிக்கும் சிறுவன், அவனுடைய சிறிய தங்கையின் செல்லப் பிராணியான அணிலை விடுதலை செய்தபோது தங்கையின் துக்கத்தை விட அணிலின் விடுதலை தான் அவனுக்கு முக்கியமாகப்பட்டது

ரெஜினால்ட் இரண்டு வயது குழந்தையாய் இருக்கும் போது, கக்குவான் இருமலினால் அவதிப்பட்டான்,

ரெஜினால்டின் அம்மா, அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார், "ரெஜி" நீ இருமும்போது இரத்தம் வர வாய்ப்புள்ளது என டாக்டர் சொல்லியுள்ளார், பயந்து விடாதே!" என மகனின் முதுகைத் தட்டியபடி கூறினார், அதற்கு ரெஜினால்டு "அம்மா!' நான் பயப்பட மாட்டேன், நீங்கள் சொல்வதைக் கேட்கின்றேன்" என்றான், வயது இரண்டு ஆனாலும் முதிர்ச்சியான மனப்பக்குவமும் மற்றவரை புரிந்து கொண்டு செயல்படும் குணமும் சிறுவயதிலேயே அவருக்கு இருந்தது,

ரெஜினால்டு இங்கிலாந்து தேசத்தில் உள்ள செஸ்டர் என்ற பகுதியில் மால்பாஸ் என்ற ஊரில் 21-4-1783-ம் ஆண்டு பிறந்தார், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்த பிள்ளையாக இருந்தார், இவருக்கு ரிச்சர்ட் என்ற ஒன்றுவிட்ட சகோதரரும் தாமஸ் ஜோத்பாட் என்ற சகோதரனும், மேரி என்ற சகோதரியும் இருந்தார்கள், தாமஸ் ஹீபர், எலிஸபெத் ஏதர்டன் தம்பதியரின் இரண்டாவது மகனாக பிறந்தவர் ரெஜினால்டு, ஒரு முறை பெற்றோருடன் மலைகள் நிறைந்த ரிப்பனிலிருந்து கிரேவன் என்ற பகுதிக்குச் செல்ல வேண்டியதாயிற்று, அப்போது புயல் அடிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது, தாமஸ் ஹீபரும் அவரது மனைவி எலிசபெத்தும் ஒரு கோச்சில் பிரயாணம் செய்தனர், ரெஜினால்டு தாயின் மடியில் அமர்ந்திருந்தார். தகப்பனார் தாயிடம், "புயல் வரும் போல தெரிகின்றது, நாம் இறங்கி விடுவோம்" என்றார்.

மடியில் அமர்ந்திருந்த மூன்று வயது ரெஜினால்டு "அம்மா பயப்படாதீர்கள். கர்த்தர் நம்மை காத்துக் கொள்வார்'

என்றாராம். எலிசபெத் தன் சின்ன மகன் அப்படிச் சொல்வான் என ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை, பிள்ளையைத் தூக்கி முத்தமிட்டு தொடர்ந்து பயணித்தார்கள், அதற்குப்பின் சுமார் 43 ஆண்டுகள், ரெஜினால்டின், வாழ்க்கையை 'கர்த்தர் பார்த்துக் கொள்வார்' என்ற நிச்சயத்திலேயே கடந்து போனது.

சுமார் ஆறு, ஏழு வயதில் ரெஜினால்டு புத்தக புழுவாகக் காணப்பட்டார், புத்தகங்கள் என்றால் அவர் வயதுக்குரிய கதைப்புத்தகங்கள் மட்டுமல்ல வேதாகமத்தில் கேட்கும் பல கேள்விகளுக்கும் அக்கேள்விக்குரிய பதில் இருக்கும் புத்தகம், எனப் பல புத்தகங்களை விரும்பி படிப்பார், கேள்வி கேட்டால் வசனம் அதிகாரம் வரை துல்லியமாகக் கூறி விடுவார், ஏழு வயதில் டாக்டர். கெனட் என்பாரின் விட்சர்ச் புகழ் பெற்ற இலக்கணப் பள்ளியில் சேர்க்கப்பட்டார், அடுத்து அவரிடம் காணப்பட்ட விசேஷமான திறமை கவிதைகள் எழுதுவது, திருக்குறளில்

"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

மணல் பகுதியில் கிணறு தோண்டத் தோண்டத்தான் நீர் ஊறும், அதுபோல, நூல்களைக் கற்க கற்க தான் அறிவு வளரும்.

அதிக நூல்களை வாசித்ததன் விளைவால் ரெஜினால்டு உள்ளத்தில் புதிய கவிதைகள் ஊற்றாய் பொங்கிவர

ஆரம்பித்தது. அவைகளை ஒரு நோட்டில் எழுதி ஒளித்து வைத்துக் கொள்வார்.

1796-ம் ஆண்டு பிரிஸ்டோ என்ற போதகரிடம் ரெஜினால்டு அனுப்பப்பட்டார், அங்கே ஜான் தோர்டன் என்ற நண்பன் அறிமுகமானார். அவனுடைய நட்பு மூலமாக கிறிஸ்தவ சத்தியங்களை அறியும் வாய்ப்பு கிட்டியது.

13 வயதாகும்போது, பள்ளியில் மாணவர்கள் விளையாட்டு மைதானத்தில் வியர்வை சிந்தி விளையாடும் போது, ரெஜினால்டு மட்டும், தனியாக நடந்து செல்வதும், தன் கற்பனை உலகில் சஞ்சரிப்பதும் வழக்கம், ரெஜினால்டின் பதறாத சுபாவம். மற்றவரிடம் மனப்பூர்வமாக அன்பைக் காட்டும் மனம், மலர்ந்த முகம், தோழர்களை கலகலப்பாக வைத்துக் கொள்ளும் பண்பு போன்ற குணங்கள் அவரைச் சுற்றிலும் நண்பர்கள் இருக்கும்படி செய்யும். குளிர் நிறைந்த முன்னிரவு நேரங்களில் ரெஜினால்டு வயது தோழர்கள், அவரைச் சுற்றிலும் இருக்கும் போது தான் படித்த கதைகளை, சொந்த கற்பனை வளத்துடன் சுவாரசியமாக சொல்லுவார், மற்ற பையன்கள் தன்னை மறந்து அவர் சொல்வதைக் கேட்பார்கள்,

வாலிபப் பிராயத்தின் நுழைவாயிலில் இருந்த ரெஜினால்டு தினமும் வேதம் வாசிக்கும் பழக்கத்தை குடும்பத்தில் அனுசரித்தபடியால், தன் சிந்தையில் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதில் ஜாக்கிரதையாக இருந்தார்,

விடுமுறை நாட்களில் தன் நண்பன் ஜான்தோர்டனுக்கு சின்னச்சின்ன சம்பவங்களையும் கடிதம் மூலம் தெரிவிக்கும் பழக்கம் ரெஜினால்டுக்கு இருந்தது. கடைசிவரை இவர் ரெஜினால்டின் நண்பராக இருந்தது குறிப்பிடத்தக்கது.

சிறுவயதிலேயே ரெஜினால்டு ஹீபரிடம் நிதானம், அன்பு, மனதுருக்கம் ஆகிய குணநலன்கள் சிறப்புள்ளதாக அமைந்திருந்தன.

இராஜாவின் பணிக்கு சிறந்தவர்களையே அவர் தேர்வு செய்கிறார். அவர்களை பிரித்தெடுத்து பரிசுத்தப்படுத்தி பயன்படுத்துகிறார்.

அத்தியாயம் - 2

இலக்கை நோக்கித் தொடர்கிறேன்

1800ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரெஜினால்டு ஆக்போர்டில் உள்ள பிரேசன் நோஸ் கல்லூரியில் சேர்ந்தார், அவரது தகப்பனாரான தாமஸ் ஹீபர் மற்றும் அண்ணன் முறையாகும் ரிச்சர்ட் போன்றோர் உடன் இருந்தனர், ரெஜினால்டைக் குறித்து கல்லூரியில் பலருக்கு அதிக அளவு தெரியாது. ஆனால் அந்த வருட இலத்தீன் மொழிக்கான பல்கலை விருதினை ரெஜினால்ட் ஹீபர் "கார்மென்செக்குலர்" என்ற கவிதைக்காக பெற்றபோது அனேக மாணவர்கள் ரெஜினால்டைக் குறித்து அறிந்து ஆச்சரியப்பட்டனர்.

கல்லூரி நாட்களிலும், ஜலதோஷம், காய்ச்சல் போன்ற நோய்களால் ஹீபர் கஷ்டப்பட்டார், கல்லூரி நாட்களில் எழுதிய "பாலஸ்தீன்" என்ற கவிதை பெருவாரியான மாணவர்களின் பாராட்டைப் பெற்று ரெஜினால்டுக்கு பெரும் புகழைப் பெற்றுக் கொடுத்தது,

1804ஆம் ஆண்டு ரெஜினால்ட் ஹீபரின் தகப்பனார் தாமஸ் ஹீபர் தனது 76ஆம் வயதில் மரணம் அடைந்தார், அவரும் ஹோட்நெட் (Hodnet) சபைகுருவாக பல ஆண்டுகள் பணியாற்றியவர்,

1804-ம் வருடம் நவம்பர் 2ம் தேதி 'A fellow of all souls' என்ற சிறப்பு விருது ரெஜினால்டிற்கு கிடைத்தது, இந்த விருது மிகவும் கௌரவமிக்கது. கல்லூரி நாட்களில்

தன் வாழ்வில் பரிசுத்தம் காணும்படி வாழ்வதில் ரெஜினால்டு தீவிரமாக இருந்தார். "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" (1பேதுரு 1:16) என்ற திருமறை வார்த்தைகளை சிந்தையில் பதித்திருந்தார். வாலிபம், மாயை களுக்கு மயங்கும் காலமாக இருந்தாலும், வேத வாசிப்பு ஜெபம் நல்ல நண்பர்களின் தொடர்பு ரெஜினால்டை தவறு செய்யாது காத்துக்கொண்டது.

கவிதை எழுதும் பழக்கம், நல்ல நூல்களை வாசிக்கும் ஆர்வம், அல்ட்ரிச் என்பவரின் தர்க்க சாஸ்திரம், கணித புதிர்களுக்கு விடை காணுதல் போன்றவை ரெஜினால்டு விரும்பி செய்த காரியங்கள். இன்றைய வாலிபர்களை ஒரு முறை யோசித்துப் பார்த்தால், நல்ல தரமான கல்லூரிகளில் சேர விரும்புவார்கள். ஆனால் அங்கு மாணவராக உயர்வதற்கான வழிகளை ஆராய மறந்து விடுவர். அதற்குப் பதிலாக அங்குள்ள கேளிக்கை விடுதிகளின் விலாசங்களை சேகரிப்பார்கள், உடலை இறுகப் பிடிக்கும் ஜீன்ஸ் மற்றும் டி-சர்ட்கள் கிடைக்கும் கடைகள், மற்றும் துணிகளின் பிராண்ட் பெயரை நூலகத்தில் புத்தகம் தேடுவது போல அந்த ஆடைகளை தேடி அலைவார்கள், காபி ஷாப், பீட்ஸா கார்னர், இப்படி... பல...பல, எல்லாரையும் சொல்ல முடியாது, சில புத்திசாலி மாணவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள், குதிரைக்கு கண்மறைப்பு போட்டது போல தங்கள் எண்ணங்களை நேராக்கி கர்த்தருக்குப் பயந்து துடிப்புடன் முன்னேறுகின்றனர், ரெஜினால்டு வாழ்வில் அதைக் காணமுடிகிறது. பேச்சுத் திறன் அவரை பல பேச்சுப் போட்டிகளுக்கு அழைத்துச் சென்றது. கிரேக்க

மொழியில் கவிதை எழுதும் திறமையையும் அவர் விட்டு வைக்கவில்லை. அதுமட்டுமல்ல, வேதாகமக் கல்வியையும் தன் கல்லூரி படிப்போடு படித்துத் தேர்வு பெற்றார்.

சிலர் சாதாரண மாணவர்களாக கல்லூரிக்குள் சென்று மகா கெட்டிக்கார மாணவர்களாக படிப்பு முடிந்து வருவார்கள், சிலர் புத்திசாலிகளாக கல்லூரிக்குச் சென்று உருப்படாத வர்களாக வெளியே வருவார்கள். ஆனால் ரெஜினால்டு கல்லூரிக்குள் சென்றபோதும் படிக்கும்போதும், வெளியே வரும்போதும் ஒரே மாதிரியாக சுடர் விடும் நட்சத்திரம் போல ஜொலித்தார்,

கல்லூரி படிப்பு முடிக்கும்போது ஆங்கிலக் கட்டுரைக்காக அவ்வருடத்திற்குரிய **"University's Bachelor's"** என்ற விருதினை பெற்றார். இப்படி படிப்பிலும், ஆவிக்குரிய காரியங்களிலும் ஹீபர் கவனமாய் இருந்தபடியால், கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி என பல போட்டிகளில் வெற்றி பெற்றதுமின்றி படிப்பிலும் பல விருதுகளைத் தொடர்ந்து பெற்று வந்தார், இது வாலிபர்களுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டு.

1804-ம் ஆண்டில் கல்லூரி படிப்பை முடித்த உடன், கர்த்தருக்கென தன் வாழ்வை அர்ப்பணித்ததன் விளைவாய், ஊழியம் செய்ய ஆசைப்பட்டார். அவருடைய அப்பாவைப் போல போதகராப் பணியாற்ற விரும்பினார். அந்த இறுதி ஆண்டு விடுமுறையில் ஐரோப்பிய நாடுகளைக் கண்டு வர எண்ணி நண்பன் தோர்டனுடன் சேர்ந்து திட்டமிட்டார்.

அத்தியாயம் - 3

ஐரோப்பிய சுற்றுப்பயணம்

1805ஆம் ஆண்டு ரெஜினால்டு தன் அருமை நண்பன் ஜான்தோர்டனுடன் ஐரோப்பாவின் வடபகுதியில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார், அந்த நேரம் யுத்த காலமாக இருந்ததால் சுற்றுலா பயணிகள் புது நாடுகளில் நுழைவதற்கு அரிதாக இருந்தது. அப்படியும் இருவரும் பயணப்பட்டனர். இவர்களின் பயணம் ஐரோப்பிய நாடுகள் மட்டுமல்லாது ரஷ்யா, ஹங்கேரி, ஆஸ்திரியா, பிரஷ்யா, ஜெர்மனி வரை நீண்டது. ஐரோப்பிய மற்றும் ரஷ்ய பிரயாணத்தில் பல காரியங்களைக் கற்றுக் கொண்டார்கள்.

1805-ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் தேதியில் தன் அன்னைக்கு எழுதிய கடிதத்தில் நாங்கள் மட்டும் ஒரு சிறு கப்பலில் வடபகுதியில் உள்ள கடலில் பயணிக் கின்றோம். நடு இரவு வரை கடலின் அழகை இரவில் காணவேண்டும் என “டெக்” என அழைக்கப்படும் கப்பலின் மேல்புறம் அமர்ந்து பார்த்துக் கொண்டு இருந்தேன், பின் உறங்கச் சென்றேன். ஞாயிறு அன்று நார்வே நாட்டின் நீல மலைகள் தெரிந்தன. அடுத்த நாள் சுவீடன் கடற்கரையைக் கண்டோம், அங்கே சங்கமமாகும் கோத்தா ஆறு வழியாக இரவு ஒன்பது மணிக்கு கூட்டன்பர்க் வந்து சேர்ந்தோம். கூட்டன்பர்க் பகுதி கடந்த 5 வருடத்தில்

இரண்டு முறை தீ விபத்தில் சிக்கியதால் அதிக பாதிப்புக்கு உள்ளாகி புதியதாக நகரம் உருவாகிக் கொண்டு இருந்தது.

என்று தான் கண்ட ஒவ்வொரு காட்சிகளையும் எழுத் தாளர்களுக்கே உரிய நடையில் விரிவாக தன் அம்மாவுக்கு. எழுதுவதைக் காணமுடிகின்றது.

அதுமட்டுமல்ல சுற்றுப் பயணத்தில் மக்களின் கலாச்சாரமாகிய உடை, சிகை அலங்காரங்கள், பெண்களின் திருமண வழக்கங்கள், ராணுவ வீரர்கள் உடை, உணவு, பழக்கங்கள் அதன் வண்ணம் என வெவ்வேறு கோணங்களில் ஆராய்ந்து அவைகளைத் தன் சகோதரன் ரிச்சடுக்கும் எழுதுவதைக் காணமுடிந்தது.

நார்வேயில் சறுக்கு விளையாட்டு நிபுணர்களின் பயிற்சி முறைகளைக் கண்டுக் களித்ததையும் குறிப்பிடுகின்றார். ஒருமுறை பனிப்புயலில் சிக்கிக் கொண்டதையும் அந்த நேரம் கூட்டமாக வந்த ரெயின்டீர் மான்களையும் கண்டதை கடிதத்தில் குறிப்பிடுகின்றார், மலைச்சரிவிலே கண்ட ஒரு பீனிஸ் மக்களின் கூடாரத்தைக் கண்டு அங்கு சென்றபோது அவர்கள் ரெய்ன்டீரின் பாலையும், பாலாடை கட்டிகளையும் கொடுத்து, உபசரித்ததைய்ம் குறிப்பிட்டு அந்தக் குடும்பத்தார் 500 மான்களுக்கு சொந்தக்காரர்கள் என்பதையும் குறிப்பிட்டுள்ளார், ஸ்வீடிஷ் மக்கள் விருந்தோம்பலுக்கு பேர்போனவர்களாகக் காணப்படுவதையும் எழுதி உள்ளார்.

சுமார் 90 மணி நேர பிரயாணத்திற்குப் பின் மாஸ்கோ வந்து சேர்ந்ததை தன் சகோதரருக்கு 1806ம் ஆண்டு ஜனவரி 4ம் தேதி எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். குதிரைகள் பூட்டிய வண்டிகளில் பிரயாணம் செய்துள்ளனர். ரெஜினால்டு பிரயாணம் வியன்னா வரை தொடர்வதைக் குறிப்பிட்டு அங்குள்ள நில அமைப்பு, மக்கள் நிலை குறித்தும் குறிப்பிடுகின்றார்.

ஜெர்மனியிலிருந்து குடியேறியவர்கள் ஹங்கேரியில் வசிப்பதைக் காணமுடிகின்றது. சில வேல்ஷ் மக்களும் காணப்பட்டனர், அவர்கள் தங்கள் நிறம் காக்கப்படுவதிலும் தங்கள் தாய் மொழியினையும் ஜாக்கிரதையாக பராமரிக்கின்றனர். இவர்கள் "மேக்கியார்" என்று அழைக்கப் படுகின்றனர். ஹங்கேரி பசுமையாக காணப்பட்டது என குறிப்பிட்டுள்ளார்.

அத்தியாயம் - 4

கர்த்தரின் சித்தம் என் போஜனம்

1806-ம் ஆண்டு ஹீபர் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு செப்டெம்பர் மாதம் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்குப் பின் தன் குடும்பம் தங்கியிருந்த ஷ்ரோப் ஷையரில் உள்ள **ஹோட்நெட்** என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

ஆக்ஸ்போர்டில் பல்கலைக்கழக சான்றிதழைப் பெற்றுக் கொண்டார். 1807ஆம் ஆண்டு ஹீபர் ஹோட்நெட்டில் உள்ள ஹோலி ஆர்ட்ஸ் ஆலய குருவாக பொறுப்பேற்றார், இதே ஆலயத்தில் தான் ரெஜினால்டின் தகப்பனார் தாமஸ் ஹீபர் மரிக்கு முன் குருவானவராக பணியாற்றி இருந்தார். ஹீபர் தான் எடுத்துக் கொண்ட போதக ஊழியத்தை சந்தோஷமாகத் தொடங்கினார். சபையில் உள்ளவர்களின் தரத்தைப் பாராதபடி, அவர்களில் ஒருவராகப் பாசமுடன் பழக ஆரம்பித்தார்.

ஹீபரின் முதல் பிரசங்க வேளையில் ஆலயத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது, ஹீபர் கொடுத்த செய்தி மிகவும் வல்லமையாக இருந்தது. மக்கள் கண்ணீரோடு செய்தியால் அசைக்கப்பட்டனர், "சிலர் நான் செய்தி கொடுக்கு முன்பே கண்கலங்க ஆரம்பித்து விட்டனர் என ஹீபர் மனம் நெகிழச் சொல்கின்றார்.

1809ஆம் ஆண்டு ஏப்ரல் 14ந் தேதி ரெஜினால்டு வாழ்வில் புது வசந்தம் பிறந்தது. ரெஜினால்டிற்கு

வயது 26. டாக்டர். வில்லியம் டேவிஸ் ஷிப்லே என்ற சிறந்த போதகரின் மகள் அமல்யா ஷிப்லே ரெஜினால்டை மணந்தார். டாக்டர். வில்லியம் புனித அசாப் பேராலயத் தலைவராக 1774ம் ஆண்டு முதல் 1826 வரை 52 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர். அப்படிப்பட்டிவர் தன் அருமை மகளை பாதிரியாரான ஹீபருக்கு கொடுக்க முன்வந்தாரென்றால் அதற்கு ஹீபரின் வேதஞானம் தான் காரணம். முதன்முதலாக அமல்யாவிற்கு ஒரு வேத புத்தகத்தை தான் ஹீபர் பரிசளித்தார். இதுவே. கர்த்தருக்கு அடுத்த காரியங்களில் அவருக்குள்ள ஈடுபாட்டைக் காட்டுகின்றது.

தன் நண்பரான தோர்டனுக்கு எழுதிய கடிதத்தில், "எங்கள் திருமணம் நடந்த அன்று மாலையே நாங்கள் இங்கு வந்து விட்டோம். வெளியே பனி படர்ந்த மலைகளின் அழகைக் கண்டு இரசித்தோம். எவ்வளவு அழகான காட்சியாக அது இருந்தது. என் மனைவியின் முன்னோர்களின் வீடு கிரேட் பிரிட்டனில் கிளைட் என்ற பகுதியில் உள்ளது. அங்கு ஒரு ஓடை இருந்தது. அருகில் ஒரு காடும் அதை சுற்றிலும் மலைகளும். மலைகளில் பனி மூடியும் இருந்தன. அருகில் உள்ள பள்ளத்தாக்கில் ஆப்பிள் மரங்கள் பூப்பூத்துக் குலுங்கிக் கொண்டு இருந்தன. அந்த இடம் முழுவதும் அந்த நறுமணம் நிரம்பி இருந்தது" என்று எழுதியிருந்தார்.

தனது சபையில், மதிய இடைவேளையில் ஒரு ஆராதனையைத் தொடங்கினார். அது கோடை காலமாக இருந்ததால் அந்த ஆராதனையில் பலர் வந்து பங்கு பெற்றனர்.

சபையில் ஹீபர் தனது தாலந்துகளையெல்லாம், பல்வேறு காரியங்களில் வெளிப்படுத்தினார். முதலாவது சபையாருக்கு, சரியான வழிகாட்டியாகவும், பாதிரியாகவும், நண்பராகவும் செயல்பட்டார். அவரது காதில் எந்த குற்றச்சாட்டும் விழாதபடி தன் வாழ்வைக் காத்துக் கொண்டார். சபையாரின் தேவைக்குக் கொடுக்காமல் தன் கைகளைக் குறுக்கிக் கொள்ள வில்லை. ஏழைகளுக்குத் தன் முகத்தை மறைக்கவில்லை.

துன்பப்படுபவர்களுக்கு முகத்தைத் திருப்பாமல் உதவினார். உதவி கேட்டு வருபவர்களுக்கு முடிந்ததைக் கொடுத்து அவர்கள் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டார். அதுபோலவே, நோய் வாய்ப்பட்டவர்கள் பசியினால் அழும் குழந்தைகளுக்கு எதையாவது தந்து சமாதானப் படுத்துவார். வலது கை கொடுப்பதை இடது கை அறியாமல், இரகசியமாய் உதவுவார். அவருடைய உதவிகள் வெளிவரா மலேயே இருந்ததும் உண்டு. அவரது தாலந்துகள் கர்த்தருடைய இராஜ்ஜியத்திற்கென செலவிடப்பட்டது.

ஒருமுறை, ஒரு ஏழைப் பெண்மணிக்கு மூன்று ஷில்லிங் பணம் கொடுத்தார். அவள் ஆச்சரியத்துடன் "கர்த்தர் உம்மை நாலத்தனையாய் ஆசீர்வதிப்பார் என்றாள். ஆனால் அவரோ, "அம்மா எனக்கு இந்த பூமியில் அல்ல, பரலோகத்தில் அது கிடைக்கும்" என்று கூறினார். அவரைச் சுற்றி இருக்கும் மக்கள் அவரது திறமைகளை பாராட்டினார்கள். அவரது ஊழியத்தில் முதல் வருடம் இப்படியாகக் கழிந்தது.

அத்தியாயம் 5

கவிஞர் ஹீபர்

ஹீபர் தன் ஓய்வு நேரங்களில் ஸ்காட்டிஷ் மற்றும் வேல்ஸ் நாட்டுப் பாடல்களை விரும்பிக் கேட்டார். மேலும் வெல்ஷியில் சில பாடல்களை எழுதவும் செய்தார். (உம்.)

Wake, wake, to the hunting
Wake you wake for the morning is high
Chilly the breezes blow
Up from the sea below
Chilly the twilight creeps over the sky
Mark how fast the stars are fading. (etc.)

அடிக்கடி இங்கிலாந்தில் வேல்ஸ் என்ற பகுதிக்கு ஹீபர் செல்வார். அப்போது தனிமையில் செல்லும்போதெல்லாம் கவிதைகள் அவர் உள்ளத்தில் தோன்றும். அதில் ஒன்று தான்,

The Spring journey

Oh green was the corn as I rode on my way,
And bright were the dews on the blossoms of May,
And dark was the Sycamore's shade to behold,
And the Oak's tender leaf was of emerald and gold

இந்தப் பாடல் நீளமானது. உதாரணத்திற்கு ஒரு சிறு பகுதியை இங்கு தந்துள்ளேன். இயற்கையில் உள்ளம் பறி கொடுத்து எழுதிய கவிதை இது!

பணியினிமித்தம் பிரயாணப்படும்போது குளிரால் பாதிக்கப்பட்டு சுகவீனமடைந்தார். ஆகையால் அவரிடம் காணப்பட்ட உற்சாகம் குறைவுபட்டது. அவ்வப்போது அந்த உணர்வுகள் கடித வாயிலாகவும் வெளிப்பட்டது.

இங்கிலாந்து சபையைச் சேர்ந்த ஹோலி ஆர்டர்ஸ் என்பவர் ஆலயத்தில் உதவிப் போதகராக வேலையை மகிழ்ச்சியுடன் செய்து வந்தார். ரெஜினால்டு அதே ஆலயத்தில் 16 ஆண்டுகள் போதகராகப் பணியாற்றினார். அதாவது 1823-ம் ஆண்டு பிஷப் பதவிக்கு தெரிந்து கொள்ளும் வரை அதே ஆலயத்தில் பணி செய்ய முடிந்தது விந்தையான விஷயம். ஆலய மக்களிடம் காணப்படும் பல்வேறு கருத்து வேறுபாடுகள். மத்தியில் சபையாரை நேசிக்கும் பாதிரியாக அவர் செயல்பட்டதை அவர் பணி புரிந்த காலங்கள் சாட்சி சொல்கின்றன.

ரெஜினால்டின் இலக்கியப் பாடல்கள் எழுதும் ஆர்வம், அப்படியே ஆவிக்குரிய பாடல்கள் எழுதும் ஆர்வமாக மாறிற்று.

பல பாமாலை பாடல்களை எழுதினார். அவைகளில் சில இன்றும் ஆலயங்களில் பாடப்படுகின்றன. (உம்.)

1. “Brightest and least sons of morning”

2. “Lord of mercy and of might”.

3. “The son of God goes forth to war”.

4. “Hosanna to the living God.”

5. “Bread of the world”.

6. “By cool siloam’s shady rill”.

7. “God, that madest earth and heaven”.

8. “The Lord of might from Sinai’s brow”

9. “The Lord will come, the earth shall quake.

10. “Holy holy holy. Lord God Almighty.

- இப்படி பல பாடல்களை எழுதியுள்ளார்.

ஹீபரின் இலக்கியப் படைப்புகளை இங்கே பட்டியலிட்டுள்ளேன்.

1. Palestine: A poem, to which is added the passage of the Red Sea (1809)
2. Europe: Lines on the present war (1809)
3. A volume of poems (1812)
4. The personality and office of the christian comforter asserted and explained (being the Barmpton Lectures for 1815)

5. The whole works of Bishop Jere my Taylor, with a life of the Author and a Critical Examination of his writings (1822)
6. Hymns written and adopted to the weekly church service of the year, principally of Bishop Heber (1827)
7. A Journey through India (1828)
8. Sermons preached in England, and sermons preached in India (1929)
9. Sermons on the lessons, the Gospel, or the Epistle for every Sunday in the year (1837)

"Quaterly Review" என்ற கிறிஸ்தவ இதழில், பல பாடல்கள் தொடர்ந்து வெளிவந்தன, வேதாகமச் சொல் அகராதி (Bible dictionary) யையும் உருவாக்கி வெளியிட்டார், "கிறிஸ்டியன் அப்சர்வர்" என்ற இதழிலும் அவரது ஆவிக்குரிய படைப்புகள் வெளிவந்தன,

1817ஆம் ஆண்டு ரெஜினால்டுக்கு 34 வயது ஆகும்போது ஆக்ஸ்போர்டில் உள்ள பிராம்டப் கல்லூரியில் பேராசிரியராக பணியில் அமர்த்தப்பட்டார், "லிங்கன்ஸ் இன்" எனப்பட்ட சட்டக்கல்லூரிக்கு சிற்றாலய போதகராக பொறுப்பேற்றிருந்தார், இந்த சிற்றாலயம் புகழ் பெற்ற சிறந்த மனிதர்கள் பங்கு பெறும் ஆலயமாக திகழ்ந்தது,

வாலிபனான ரெஜினால்டு, தான் போக வேண்டிய வழி இதுதான் எனப் புரிந்துகொண்டு, அதில் முழுமனதோடு

செயல்பட்டதை உணரமுடிகின்றது. அதுமட்டுமல்ல கர்த்தருடைய சித்தம் அவர் வாழ்வில் என்ன என்பதை முற்றிலுமாக புரிந்து அதற்கென தன் வாழ்வை அர்ப்பணித்த போது அபரிமிதமாக அவரது படைப்புகள், படிப்பு மற்றும் ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார்,

கர்த்தரின் சித்தமும், மனிதனின் விருப்பமும் ஒன்றாகி விட்டால் அவனே சிறந்த மனிதனாக இவ்வுலகில் பயன்படுவான்.

கர்த்தரிடம் உங்கள் வாழ்வில் அவரது சித்தம் என்ன வென்று கேட்டுப் பாருங்கள். அவரது சித்தமே உங்கள் வாழ்வின் விருப்பமாக மாற்றி விடுங்கள்,

பிதாவின் சித்தத்தை செய்வதுதான் எனக்கு போஜனமாக இருக்கின்றது. - (யோவான் 4:34) என்ற இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றுவோம்,

ஹீபர் வசித்த வீடு மிகவும் இடிந்து காணப்பட்டது, 1814-ம் ஆண்டில் அந்த வீட்டை இடித்துவிட்டு புதுவீட்டை கட்ட சபையார் உதவினர். முன்பைவிட ஹீபரின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. அவர் அதிகாலையில் எழும்பும் பழக்கம் உடையவர். ஆகவே துரிதமாக எழுந்து குடும்ப ஜெபத்தை முடிப்பார், போதகருக்கான வேலை தொடங்குமுன்னர் சிலமணி நேரங்கள் மற்ற இலக்கிய நூல்களை ஆழ்ந்து படிப்பார்,

வேலைகள் தொடங்கிய பின் முழு ஈடுபாட்டோடு செய்வார், சபை நிர்வாக வேலைகளில் ஈடுபடுவார், வியாதிப்பட்டோர், மரணதருவாயில் உள்ளவர்களைப் போய் சந்தித்து ஆறுதலாக பேசி வருவார், மரணத்தை குறித்ததான பயம் எப்போதும் அவருக்கு இல்லை, குருவானவர் வேலைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார்,

ஓய்வு நாட்களை, அதற்குரிய பரிசுத்தத்தோடு ஆசரிப்பார், குடும்பத்திலும் ஆண்டவருடைய வார்த்தை குடும்ப அங்கத்தினர்களால் பகிர்ந்து கொள்ளப்படும், பொதுவாக சபைக்கான காரியங்கள் முடிந்ததும், பிரசங்கங்களுக்காக செய்திகளை ஆயத்தப்படுத்துவார், குடும்பத்தினருடனும் பிள்ளைகளுடனும் நேரம் செலவழிப்பார்,

1816-ம் ஆண்டு ஹீபரின் வாழ்வில் தாங்கமுடியாத துக்கம் நேர்ந்தது, அவரது அருமைத் தம்பி தாமஸ் கத்பெர்ட் மூளையில் ஏற்பட்ட கட்டியால் சுகவீனமடைந்த சிலநாட்களுக்குள் மரித்துப் போனார், ஹீபருக்கு இந்தப் பிரிவு அதிக பாதிப்பை ஏற்படுத்தியது, மரித்துப்போன தன் அருமை சகோதரனை, நினைத்து எழுதி இணைத்த ஒரு கவிதை

"He called me by a brother's bier
As down I knelt to prayer,
But ah through sorrow shed the tear
Repentence was not there."

1817ம் ஆண்டு செயின்ட் ஆசாப் ஆலயத்திற்கு மாற்றப்பட்டார். ஆகவே அடிக்கடி வேல்ஸ் நகருக்கு குதிரையில் பிரயாணப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது.

1818ம் ஆண்டு ஹீபருக்கு முதலில் பிறந்த பெண் குழந்தைக்கு பார்பரா என்ற பெயரிட்டு அன்புடன் வளர்த்தார். ஆனால் அப்பெண்குழந்தை ஆறாம் மாதம் நோய்வாய்ப்பட்டு மரித்தது. அதன் தலையில் நீர் கோர்த்து அக்குழந்தை கஷ்டப்பட்டது. பிள்ளையின் இழப்பால் ஹீபரைவிட அவரது மனைவி அமல்யா அதிகமாகப் பாதிக்கப்பட்டார்.

ஹீபரின் மூத்த மகள் பார்பரா மரித்த அன்று ஹீபர் அந்தத் துக்கத்தை வழக்கம்போல கவிதையாய் எழுதினார். தன் உள்ளத்து உணர்வுகளை சொற்களாய் வடித்து அதை கவிதையாய் கோர்த்த அந்த மாலை இதோ!

Thou art gone to the grave! And while nations bemoan thee
Who drank from thy lips the glad tidings of peace;
Yet grateful, they still in their heart shall enthrone thee,
And ne'er shall thy name from their memory cease
Thou art gone to the grave but thy work shall not perish,
That work which the spirit of wisdom hath blest;
His might shall support it, His mercy shall cherish
His love make it prosper tho' thou art rest.

- பிள்ளையை பிரிந்ததற்கான ஏக்கம் இந்தப் பாடலில் தெரிகின்றதா, அல்லது கர்த்தரின் அன்பு, இரக்கம், ஞானம் தெரிகிறதா, எல்லாத் துக்கங்களையும் கர்த்தரைக் குறித்துப் பாடிப்பாடி அதை தீர்த்துக் கொண்டார். இதே பாடல்தான் ஹீபரின் மரணத்திற்குப் பின்னும் ஹீபரை அதிகமாய் நேசித்த ஒருவர் பாடினார் என செய்திக்குறிப் பொன்று கூறுகின்றது.

1820-ம் ஆண்டு தொண்டை அடைப்பான் நோயால் சபையாரில் பலர் கடுமையாக பாதிக்கப்பட்டனர், ஹீபர் அவர்களைச் சந்தித்து பல வகையில் உதவினார், பலர் ஆபத்திலிருந்து விடுதலையானார்கள்,



அத்தியாயம் - 6

தேவ அழைப்பும் - கீழ்படிதலும்

1882ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொல்கத்தா பேராயர் மிடில்டன் இறந்து விட்டார் என்ற செய்தி இங்கிலாந்து தேசத்திற்கு எட்டியது. அடுத்த பேராயரைத் தேர்வு செய்யும் பொறுப்பு கிழக்கு இந்திய கம்பெனி குழுவில் தலைவராக இருந்த வில்லியம் வைன் என்பவரிடம் இருந்தது. அவர் ரெஜினால்டு ஹீபரின் நண்பர்.

இங்கிலாந்தில் ஹோட் நெட் திருமண்டலத்தின் தலைமைப் போதகராக ரெஜினால்டு ஹீபர் சிறப்பாக பணிசெய்து கொண்டு இருந்தார். வில்லியம் வைனிடமிருந்து ஹீபருக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் இந்தியாவுக்கு ஒரு பேராயர் தேவைப்படுகிறது எனவும் அப்பேராயர் பதவிக்கு ஹீபர் தகுதியுள்ளவர் என வைன் கருதுவதாக எழுதியிருந்தார். மேலும் இது குறித்து ஹீபரின் விருப்பத்தைத் தெரிவிக்கும்படி வைன் எழுதி இருந்தார். இங்கிலாந்திலேயே அவருக்கு பெரும் உயர்வு வர இருப்பதை தியாகம் செய்த பின்தான் இந்தியா போகவேண்டியநிலை இருப்பதால், அது ஹீபருக்கு விருப்பம் இல்லை என்றால், சரியான ஒரு நபரை பரிந்துரைக்கும்படியும் கேட்டிருந்தார்.

ஹீபர் தன் மனைவி, மற்றும் நெருங்கிய நண்பர்களிடம் கலந்து பேசினார். தன் சிறுகுழந்தையின் வளர்ப்பு, படிப்பு, மற்றும் மனைவியின் உடல்நலம் போன்றவைகளை மனதில்

கொண்டு இருமுறை இவ்வாய்ப்பை ஒதுக்கிவிட்டார். சொந்த நாட்டையும், வீட்டையும், நண்பர்களையும் பிரியவேண்டும். அவைகளை மீண்டும் காணும் வாய்ப்பு இல்லாமலும் போய்விடலாம் எனக் கருதி மறுத்துவிட்டார். வில்லியம் வைன் மீண்டும் மீண்டும் ஹீபருக்கு பேராயர் பொறுப்பை எடுத்துக்கொள்ளும்படி எழுதினார். அதுமட்டுமல்ல ஹீபர் இந்தியாவிற்குச் சென்றால் இந்தியாவிற்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வழைப்பு மறுபடியும் தனக்கு வருவதை அறிந்து, சுயத்தைவிட தேவனுக்குக் கீழ்ப்படிவதையும், தேவன் படைத்த இந்திய மக்களுக்கு நன்மை செய்வதையும் தேவ சித்தம் என தீர்மானித்தார். தன் மனைவியும் இசைந்துவரவே, மூன்றாவது முறை அவ்வழைப்பை தேவஅழைப்பாக ஏற்றுக்கொண்டார்.

1823ஆம் ஆண்டு ஜனவரியில் நண்பர் ஜான் தோர்டனுக்கும், வில்லியம் வைன் அவர்களுக்கும் தனது தீர்மானத்தை தெரிவித்து கடிதம் எழுதினார்.

அருட்பணியின் விலைக்கிரயத்தை ஹீபர் நன்கு உணர்ந்திருந்தார். இப்போது பெற்றுவரும் நல்ல சம்பளம், சுகவாழ்வு பறிபோய்விடும் என்பதைத் தெரிந்தும் இந்தியாவில் பணிசெய்ய இசைவு தெரிவித்து எழுதினார். தேவனுக்கு கீழப்படிதலின் மனநிறைவையும், அதற்கு மேலாக தேவவல்லமையின் மகத்துவங்களையும் நினைவு கூர்ந்தவராய் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு புறப்பட காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்.

பதினாறு ஆண்டுகள் கட்டி வளர்த்த திருச்சபை மக்களையும், வேலைகளையும், சுற்றத்தாரையும் நெடுநாள் பிரிவிற்கு ஆயத்தம் செய்வது எளிதான காரியமல்ல, வயதான தாயைப் பிரிய வேண்டும், சிறுபிள்ளையிலிருந்து உடன் வளர்ந்த அன்பு சகோதரியை விட்டு வர வேண்டும், அன்பு தந்தை மற்றும் சகோதரன் இழப்பை நினைவு கூறும் கல்லறையை மறக்க வேண்டும். இப்படிப் பல எண்ணங்கள் ஹீபரின் நினைவில் தோன்றி பிரிவின் வேதனையைக் கூட்டியது. தேவ வல்லமை அவைகளை மேற்கொள்ள உதவியது.

ஹோட்நெட் திருமண்டல சபை மக்கள் அனைவரும் சேர்ந்து ஒரு தாம்பாளத்தை நினைவு பரிசாக வழங்கினர், அதில் ஏழை, பணக்காரர் என அத்துணை பெயர்களும் பொறிக்கப்பட்டிருந்தது, ஹீபர் பிரிவு உபச்சாரக் கூட்டத்தில் தன் கடைசிப் பிரசங்கத்தை பிரசங்கித்தார். அது தேவ நற்செய்தியின்படி உலக மக்களை இரு வகையாக மட்டுமே பிரிக்க முடியும் எனவும் ஒன்று நேசிக்கப் பட்டவர்கள், மற்றது நேசிக்கப்பட வேண்டியவர்கள், மானிடர் மேல் தேவ அன்பு, எவ்வளவு பெரியது என்ற மிஷனெரி செய்தியை வழங்கினார், எபேசு சபை மூப்பர்களிடமிருந்து பிரிந்து செல்லும் போது "என் முகத்தை இனி பார்க்க மாட்டீர்கள்" என்ற பவுலின் வார்த்தைகளைக் கேட்டு பவுலின் கழுத்தைக் கட்டிப்பிடித்து அழுதார்களே அதேபோல் அங்கும் நடந்தது.

ஹீபர் மல்பாஸ் என்ற தன் சொந்த ஊருக்குச் சென்று நண்பர்களிடம் விடைபெற்றார். அப்போது இந்தியாவில் கங்கைக் கரையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை கேள்விப்பட்டார், உயிர் போய்விடும் நிலையிலிருந்த ஒரு இந்தியனை இந்துக்கள் வழக்கப்படி கங்கைநதி ஓரத்தில் போட்டுவிட்டனர். அப்போது ஒரு வெளிநாட்டவர் அவனை கண்டு அவனுக்கு ஆகாரம் கொடுத்து மருத்துவம் செய்தார், அவன் உயிர் பிழைத்துக் கொண்டான். அவன் பிராமண இனத்தைச் சேர்ந்தவன். வேறு இனத்தவரிடம் ஆகாரம் பெற்றதால் அவன் தீட்டுள்ளவன் என்று அவன் குடும்பத்தினர் அவனை தள்ளிவிட்டனர், ஜாதியிலிருந்தும் விலக்கி விட்டனர். அவன் மிகவும் ஏழையானபடியால் தன் ஆகாரத்திற்காக தன்னைக் காப்பாற்றியவரிடமே செல்ல வேண்டியதாயிற்று. அவரிடம் உதவி பெற்றுச் செல்லும் போது, தன்னைத் தொட்டுக் காப்பாற்றி, ஜாதியிலிருந்து விலக்கப்பட்டு தன்னை ஒரு அனாதையாக்கி விட்டாரே என்று உதவியவரையே மனதில் கசந்து திட்டிக்கொண்டு போவானாம்,

இக்கதையைக் கேட்ட உடனே ஹீபர் "இப்படி ஒரு நபரை மூடத்தனத்திலிருந்து காப்பாற்ற கர்த்தர் எனக்கு உதவி செய்வாரானால், என் எல்லாத் தியாகத்திற்கும் அதுவே சமமாகிவிடும் என்று கூறினாராம், தன் உற்ற சிநேகிதரிடம் தான் எந்த நோக்கத்தோடு இந்த பிஷப் வேலையை ஏற்றுக் கொள்கிறேன் என்பதை விரிவாக பேசிக் கொண்டிருந்தார்.

கடைசியாக Shropshire என்ற இடத்தில் 100 பவுண்டு கடன் தொகையை அடைக்க தீர்மானித்தார். அந்தக் கடன் அவரால் வந்ததல்ல, அவர் பெயரை பயன்படுத்தி எவனோ ஏமாற்றியதால் உண்டான கடன், ஆகவே அடைக்காமல் விட்டு வைத்திருந்தார்,

ஆனாலும் இங்கிலாந்தில் கடன் வைத்து விட்டு இந்தியாவிற்கு ஊழியத்திற்குப் போய்விட்டார் என்று இயேசுவின் நாமம் இகழப்படாதபடி அந்த நூறு பவுண்டு பணத்தை அடைத்து விட தீர்மானித்து சென்றபோது. அங்கு ஒரு நல்ல செய்தியைக் கேள்விப்பட்டார், யாரோ ஒரு நபர்? தான் செய்த தவற்றை மன்னிக்கும் படியும் ஹீபரிடம் பணம் வசூலிக்க் வேண்டாம் என்றும் எழுதி. சில தினங் களுக்குமுன் 100 பவுண்டு அனுப்பி வைத்துள்ளார் என்பதே, இந்திய தேசத்திற்கு பயணத்தை தொடங்குமுன் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் அவருக்கு Doctor of Divinity (D.D) என்ற பட்டத்தை அளித்து கௌரவித்தது.

பத்திரமான பயணத்திற்காக சரியான காலசூழ்நிலைக்கு காத்திருந்தார், பார்க்கவேண்டிய ஒவ்வொருவரையும் பார்த்து பிரியாவிடை பெற்று 1823ம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி டாக்டர், ஹீபர் பயணத்தை துவக்கினார், தனக்குப் பிரியமான ஊரை, தனது நாட்டை, கப்பலில் இருந்து பார்த்துக்கொண்டே இருந்தார், இதுவரை அடக்கிவைத்த அவரின் உணர்வுகள் பொங்கி எழ தன் ஊரை நோக்கி தீர்க்கதரிசனமாக "இங்கு நான் ஒருபோதும் திரும்பப் போவதில்லை" என்று சொல்லி

கண்கலங்கினார், பின் லண்டனில் சில வாரங்கள் தங்கி ஆயத்தப் பணிகளை முடித்தார்.

ஹோட்நெட்டில் குருத்துவ பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டார். 1823ஆம் ஆண்டு ஜூன் முதல் நாள் இந்திய தேசத்தின் பிஷப் ஆக இங்கிலாந்து தேசத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு கப்பல் ஏறுமுன் ஹீபர் தன் தாய்க்கு எழுதிய கடிதம்!

அன்புள்ள 'அம்மா!',

நான் தேவ ஊழியத்திற்குப் போகிறேன், போகும் இடத்தில் நான் பயனுள்ளவனாக இருக்க ஜெபியுங்கள், உங்களுக்கு கர்த்தரிடமிருந்து கிருபையும் உதவியும் வரும், நாம் கர்த்தருக்குச் சித்தமானால் சில ஆண்டுகளுக்கு பின் சந்திக்கலாம், இல்லாவிட்டால் நித்திய வீட்டில் பிரிவு இல்லாத இடத்தில் உங்களையும் அப்பாவையும், தம்பியையும் நாம் நித்திய மகிழ்ச்சியில் காண்போம்" ...

இப்படிக்கு,

அன்பு மகன் ரெஜினால்டு

என்று எழுதினார்

1823ஆம் ஆண்டு ஜூன்11 ஆம் தேதி பிஷப் ஹீபர் பயணத்தைத் தொடங்கினார்.

அன்றைய நாளில் இந்தியாவை 'துன்பம், துக்கம், ஏமாற்றம்,' சாவு நிறைந்த பூமி என்று அழைப்பார்கள்.

ஞாயிறு அன்று கப்பலில் ஆராதனை நடத்தி செய்தி கொடுத்தார், கப்பல் பயணத்தின்போது கடலில் மீன்கள் துள்ளி விளையாடுவதைக் கண்டு இரசித்துக் கொண்டு வந்தார், தனக்கு உதவி செய்யும் பிரியமான நண்பர்கள், உறவினர்கள், சபை மக்களை விட்டு வெதூரம் போய்க் கொண்டிருக்கிறோம், இனிமேல் எல்லாவற்றையும் தானே செய்ய வேண்டும் என்ற தன் சிந்தனையை உதறிவிட்டு கர்த்தர் மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்குவார் என்ற எண்ணத்தை மனதில் நிறுத்தி பயணத்தைத் தொடர்ந்தார்.

பயணத்தில் எதிர் திசையில் வரும் கப்பல்களில் கொடுத்தனுப்ப அவ்வப்போது கடிதங்களை எழுதினார், பல வாரங்கள் ஆகியும் நிலம் காணாது கடலில் பயணம் செய்தார், பயண நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவிட தீர்மானித்து, இந்துஸ்தானி, பெர்சியன் மொழியைக் கற்றுக் கொள்ளப் பயிற்சி எடுத்தார், பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி போன்ற மொழிகளைக் கற்றிருந்தாலும், இப்போது நாற்பது வயதில் பிறமொழியைக் கற்பது சற்று கடினமாகவே இருந்தது.

இரவில் கடலில் பயணிக்கும் போது வானத்தின் விண்மீன்களைக் கண்டு தேவனின் படைப்பின் மகிமையை உணர்ந்தார், பகலில் திமிங்கிலங்கள் கூட்டமாக துள்ளி விளையாடி தண்ணீரை வாலினாலும், நாசியிலும் அள்ளி இறைக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஒரு சில இடங்களில் ராட்சத அலைகள் எழும்பி கப்பலில் மோதுவது அச்சுறுத்தலாக காணப்பட்டது. பிஷப் ஹீபர் பயணம் செய்த கப்பல் நல்ல கட்டமைப்பு கொண்டது, அலைகளால் உடைந்து விடும் அபாயம் அற்றது, ஒன்பது

வாரப் பயணத்திற்குப்பின் அட்லாண்டிக் கடலைக் கடந்து நன்நம்பிக்கை முனையை வந்து சேர்ந்தது. பயணிகள் தேவனைத் துதித்தனர். இந்தியக் கடலில் பயணத்தை தொடர்ந்தனர். கப்பலிலேயே ஆராதனை. வியாதியாய் இருப்பவர் களுக்கு ஜெபிப்பது என பிஷப் ஹீபர் தன் ஊழியத்தை செய்து வந்தார். இப்பயணத்தில் மிக அழகிய வர்ணிக்க இயலாத 'சூரிய அஸ்தமனத்தைக்' கண்டு வியந்தனர். சூரிய ஒளி கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து. பல வண்ணங்களைத் தோற்றுவித்து முடிவில் இருளாகும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

மூன்று மாத பயணத்திற்குப்பின் 1823ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆறாம் நாள் கொல்கத்தா துறைமுகத்தில் கப்பல் நங்கூரம் போட்டு நிறுத்தப்பட்டது. பின் சிறு படகுகளில் ஹூக்கிளி நதி முகத்துவாரம் வழியாக கல்கத்தா நகரை வந்தடைந்தார். ஒரு பக்கம் மக்கள் கூட்டம் நிறைந்தும். மறு பக்கம் பழ மரங்களும். வயலுமாக செழிப்பாக காணப்பட்டது. ஆண்கள் பலர் இடுப்பில் மட்டும் ஒரு சிறு துணியை அணிந்திருந்தனர். பெண்கள் சற்று கூடுதலாக ஆடை உடுத்தியிருந்தனர். பிராமணர்கள் மட்டும் சற்று சுத்தமாக உடுத்தியிருந்தனர். தங்களுக்கென கிண்டர்பூர் என்ற இடத்தில் ஒதுக்கப்பட்ட ஓர் உயர்ந்த விசாலமான பல அறைகள் உள்ள ஒரு பங்களாவிற்கு வந்து சேர்ந்தனர். காற்று வீசுவதற்கு ஏற்ப அறையின் மேல்பகுதியில் பங்களா அமைக்கப்பட்டிருந்தது. வீட்டில் ஹீபரின் மனைவிக்கு உதவுவதற்கு. சமைப்பதற்கு. குடை பிடிப்பதற்கு என பலரை நியமித்திருந்தனர்.

அத்தியாயம் - 7

கொல்கத்தாவில் பிஷப் ஹீபர்

கொல்கத்தா வந்து சேர்ந்த ஹீப்ர் கவர்னர் ஜெனரலான லார்ட் அம்ஹார்ட்டை அலுவலகத்தில் சந்தித்தார். கவர்னர் ஜெனரலும் ஹீபரை தன் இல்லத்திற்கு அழைத்தார். அடுத்து வந்த ஞாயிற்றுக் கிழமை பேராலயத்தில் ஹீபர் பிஷப்பாக பிரதிஷ்டை பண்ணப்பட்டார்.

பரக்பூர் என்ற இடத்தில் கவர்னர் ஜெனரலுக்கு ஒரு அழகிய மாளிகை இருந்தது. அதைச் சுற்றிலும் 150 ஏக்கரில் எழில்மிகு பூங்கா அமைந்திருந்தது. ஹீபரும் அவர் மனைவியும் அங்கு சென்று கவர்னர் ஜெனரலையும், அவரது துணைவியாரையும் சந்தித்தனர். பிஷப் ஹீபரையும் அவர் மனைவியையும் அவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

அங்குள்ள சமுதாய அமைப்பு, இயற்கை வளங்கள், மற்றும் கிறிஸ்தவத்திற்கு உள்ள வரவேற்பு போன்றவைகளை தெளிவாக பேசினார், அன்றே இவைகளை விளக்கி இங்கிலாந்திலுள்ள வில்லியம் வைன் என்பவருக்கு ஹீபர் கடிதம் எழுதியுள்ளார்.

அன்புள்ள வைன்,

இங்கு நாம் அமைத்துள்ள கல்விக் கூடங்கள் நன்றாக இல்லை, சிறு பிள்ளைகளை மதமாற்றம் செய்வதை பெற்றோர் விரும்பவில்லை. பள்ளியில் வேதத்தைக் கற்றுக்

கொடுப்பதை ஒருவரும் எதிர்ப்பதில்லை. புலால் உணவு பழக்கத்தையும், ஞானஸ்நானம் கொடுப் பதையும் மட்டும் மக்கள் விரும்பவில்லை, ஏனென்றால், அதனால் தாங்கள் ஜாதியை விட்டு தள்ளப்பட்டு விடுவோம் என அஞ்சுகின்றனர். பள்ளி சிறார்களுக்கு நாம் சத்தியத்தை போதித்து அதை அவர்களின் அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்ல நாம் உதவவேண்டும்.

பள்ளிகள் குடிசைகளாக இருக்கின்றன, நூற்றுக்கணக்கான சிறு பிள்ளைகள் மண் தரையில் அமர்ந்து தங்கள் விரல்களால் மணலில் எழுதி அல்லது ஓலைகளில் எழுதிப் படிக்கின்றனர். நல்ல சமாரியன் அல்லது யோசேப்பின் கதையை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர்...

தங்களின் பிரிய நண்பன் ரெஜினால்டு, கொல்கத்தா.

சமுதாய அமைப்பைப் பற்றி எழுதும்போது கூட்டுக்குடும்ப வாழ்க்கை, செல்வ செழிப்புள்ளவர்களின் ஆடம்பர வாழ்க்கை மற்றும் இளம்பெண்கள் உடன்கட்டை ஏறும் அவலநிலை பற்றியும் எழுதியுள்ளார்,

பின் நாட்களில் கொல்கத்தாவில் திரு. ராஜாராம் மோகன்ராயுடன் இணைந்து உடன்கட்டை ஏறும் மூடப் பழக்கத்தை ஒழிக்க பாடுபட்டார். இந்து மத மறுமலர்ச்சியை தோற்றுவிக்க காரணமானவர் ராம்மோகன் ராய். ராஜாராம் மோகன் ராயின் சிந்தனைத் தூண்டலுக்கு, பிஷப் ஹீபரோடு

அவர் கொண்டிருந்த தொடர்புதான் காரணம் என்றால் அது மிகையாகாது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

1824ஆம் ஆண்டு ஜனவரி 10ம் நாள் அன்று டக்ளஸ் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் இந்திய மக்களைப் பற்றி குறிப்பிடும்போது... அறிவுள்ள மக்கள், உற்சாகமாக காணப்படுகிறார்கள், ஆனால் அவர்களின் மதம் ஒரு பெரும் குழப்பமாக காணப்படுகிறது, அதன் விளைவாக ஒழுக்க நெறிகள் குறைந்துள்ளது. ஜாதிக் கோட்பாடுகளின் விளைவாக மக்களின் உள்ளம் அதிசயத்தக்க அளவு கடினப்பட்டுப் போய் உள்ளது. 10 நாட்களுக்கு முன் ஒரு கிராமத்தில் நடந்த ஒரு நிகழ்வை குறிப்பிட விரும்புகிறேன், ஒரு வழிப்போக்கன் வியாதியால் மயங்கி ஒரு கிராமத்து தெருவில் விழுந்து கிடந்தான். அவன் எந்தச் ஜாதியைச் சேர்ந்தவன் என்று தெரியாததால் ஒருவரும் அவனுக்கு அருகில் சென்று காப்பாற்ற முன்வரவில்லை, அவனைத் தொட்டால் தீட்டாகி விடுவோம் என்ற பயமே. பல மக்கள் முன்னிலையில், சாவின் விளிம்பில் இருந்த அவனை சீக்கிரமாய் சாவிற்கு அழைத்துச் செல்ல நாய், நரிகள் அவனைச் சூழ்ந்தன, அவைகளை விரட்ட சிறுவர்கள் கற்களையும் மண்ணையும் அவன்மேல் எறிந்தனர், இந்நிலையை கண்டு அவ்வழியே சென்ற ஒரு வெளிநாட்டவன் அவனை எடுத்து கவனித்து சுகமாக்கினான். அவன் அப்படியே இறந்து போயிருந்தால் அவனுடைய பிணம் காக்கா கழுகுகளுக்கு இரையாக விடப்படும் அல்லது பிணத்தை எடுத்து ஆற்றில் போடும்படி மேஜிஸ்ரேட்

உத்தரவிட வேண்டும். இப்படி பல இரக்கமற்ற நிகழ்வுகளைக் கண்டு. கேட்டறிந்து உள்ளம் நெகிழ்ந்ததாக கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால் வசதியுள்ள மக்கள் பல நற்காரியங்களைச் செய்கிறார்கள். தானமாக தண்ணீர் தொட்டிகள் கட்டுகிறார்கள். புண்ணியஸ்தலங்களுக்குச் செல்லும் சாலைகளை அமைக்கிறார்கள். கங்கையில் படித்துறைகளை கட்டித் தருகிறார்கள். கிறிஸ்துவின் அன்பை உணர்ந்த நம்மால் நிர்விசாரமாக வாழ முடியாது. இந்துக்களை நான் குறை கூறவில்லை. அவர்களை அதிகமாக நேசிக்கிறேன். நானும் என் மனைவி எமிலியும் அடிக்கடி உங்களைக் குறித்து பேசுவோம். நாங்கள் மனநிறைவுடன் இருக்கிறோம்.

இப்படிக்கு,

உங்கள் பிரியமுள்ள கசின்

ரெஜினால்டு, கொல்கத்தா.

1824ல் ரெஜினால்டு ஹீபர் அவர்களுக்கு இரண்டாவதாக ஒரு அழகான பெண்குழந்தை பிறந்தது. அன்று அவர் பேராலயத்தில் நன்றி உணர்வோடு உற்சாகமாக செய்தி கொடுத்தார். பெரிய மகள், குட்டி மகளை கொஞ்சி விளையாடுவதைக் கண்டு மகிழ்வார். இருவரும் தேவ அன்பில் வளர வேண்டும் என மனதில் ஜெபித்தார்.

பிஷப் ஹீபருக்கு கொல்கத்தா நகரம் ரஷ்யாவிலுள்ள பீட்டர்பர்க் போன்று காணப்பட்டது. முக்கிய வீதிகள். வீடுகளின் அமைப்பு. அலங்கார தூண்கள இத்தாலிய

நுழைவாயில்கள், தாழ்வாரங்கள் தான் ரஷ்யாவில் இருப்பதைப் போன்று உள்ளது. யானை? குதிரை முதல் சிறு அணில் கொசு வரை ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்து அவைகளை குறித்த தம் எண்ணங்களை அவ்வப்போது தம் நண்பர்களுக்கு எழுதுவதை வழக்கமாக வைத்திருந்தார்.

கவர்னர் ஜெனரல் நடத்தும் தர்பாரைக் காணச் சென்றார். குறுநில மன்னர்கள், ஆளும் வர்க்கத்தினர் கவர்னர் ஜெனரலை வெகுமதியோடு கண்டு கொண்டு சென்றனர். தங்கள் விண்ணப்பங்களை கொடுப்பதும் பதிலுக்கு கவர்னரும் சில பரிசுகளை கொடுத்து. அதை அவர்கள் பெற்றுச் செல்வதும் ஒரு அரிய காட்சியாக இருந்தது. நில வாரிசு உரிமையை பெற்றுக்கொள்வதும், ஆளும் அதிகாரம், முத்திரை மோதிரம் போன்றவை பெற்றுக்கொள்ளவும் இந்தியாவில் பல பகுதிகளிலிருந்து மன்னர்களும், அதிகாரிகளும் வந்திருந்தனர்.

1824 ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் நாள் முதல் லெந்து கால பிரசங்கத்தை ஹீபர் ஆலயத்தில் பிரசங்கித்தார். ஆச்சரியப்படும்படி ஆலயத்தில் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. ஹீபரின் பிரசங்கங்கள் ஆழமானதாகவும், மக்களை சிந்திக்கத் தூண்டும் வகையிலும் அமைந்திருந்ததும் சபையார் அதிகமாக வருவதற்கு ஒரு காரணமாக இருந்தது. அவர் பிரசங்கத்தின் கருப்பொருள் இதுவே. எல்லோரும் நிச்சயமாக ஒருநாள் சாகப்போகிறோம்.

கவனமாக கர்த்தருக்காய் வாழ்ந்தால் சாவிலும் இலாபம் அடையலாம், எனவேதான் சாவு எனக்கு ஆதாயம் என்று பவுல் கூறுகிறார்,

எவ்வளவு காலம் வாழ்கின்றோம் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்கின்றோம் என்பதே முக்கியம், காலங்கள் கர்த்தரின் கரத்தில் உள்ளது, குறுகிய நாட்களே வாழ்ந்த தேவதாசர்கள் பலர் சரித்திரத்தில் - பெரும் விளைவுகளை தோற்றுவித்திருக்கின்றனர்,

அத்தியாயம் - 8

இந்திய திருமண்டலத்தில் பிஷப் ஹீபர்

பிஷப் மிடில்டன் காலத்தில் நற்செய்தி அறிவித்தலும் சபை வளர்ச்சியும் குன்றி காணப்பட்டது, அதற்குக் காரணம் பிஷப் மிடில்டன் மிஷினரிகளிடம் நடந்து கொண்ட விதம் அன்பற்றதாகக் காணப்பட்டது. போதகர்களை, பணிக்கு அமர்த்துதல், பணி இடம் மாற்றல், அவர் களின் சம்பளம் ஆகியவை கிழக்கு இந்திய கம்பெனியின் கட்டுப் பாட்டில் இருந்தது, திருச்சபை ஆதரவோடு செயல்படும் மிஷனெரி சங்கங்களின் செயல்பாடுகள் மூலமாக மட்டுமே திருச்சபை வளர்ச்சி இருந்தது, மிஷினெரி சங்கங்கள் தங்கள் பணத்தேவையையும், ஊழியர்களையும் அவர்களாகவே சந்தித்தனர், ஆயிரக்கணக்கான மக்களை ஆண்டவருக்கென்று ஆதாயப்படுத்தி வந்தனர், இறையியல் படித்த, குருபட்டம் பெற்ற ஊழியர்களை, எழுப்ப வேண்டிய பொறுப்புள்ள திருச்சபை, மிஷினரி சங்கங்களின் செயல்களையும் அதன் ஊழியர்களின் தகுதியையும் குறைத்துப் பேசிக்கொண்டிருந்த காலம் அது, இத்தகைய சூழ்நிலையில் நற்செய்தியில் நாட்டமுள்ள, மிஷனெரி வாஞ்சையுள்ள ஒரு பிஷப் இந்தியாவிற்குத் தேவையாயிருந்தது, இது தான் ஹீபர் இந்தியா வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது.

பிஷப் ஹீபர் இங்கிலாந்து இராஜாவிடமிருந்து பணி ஆணையைப் பெறுமுன், இந்திய சூழ்நிலையை

அவர்களுக்கு அறிவித்து அதற்கு ஏற்றாற்போல் தன் பதவியைப் பயன்படுத்தும் வகையில் ஆணையைப் பெற்றிருந்தார். இறையியல் படித்தவர்களை மட்டுமே ஊழியர்களாக, குருக்களாக, உபதேசிகளாக பதவிப் பிரமாணம் செய்து வைப்பது இங்கிலாந்து நாட்டின் முறைமை. ஆனால், விசுவாசமும், கர்த்தரின் மேல் வாஞ்சையுமுள்ள தகுதியுள்ளவர்களை இந்தியாவில் குருக்களாக அபிஷேகம் செய்ய பிஷப் ஹீபர் அனுமதி பெற்றிருந்தார்.

பிஷப் மிடில்டன் இறையியல் பணிக்கென ஒரு பூர்வாங்க அமைப்பை ஏற்படுத்தியிருந்தார். அதில் மூன்று மூத்த குருமார்கள் இடம் பெற்றிருந்தனர். இவ்வமைப்பை அடிப்படையாகக் கொண்டு பிஷப் ஹீபர் தன் பணியைத் துவக்கினார். திருமண்டலம் முழுதும் இரட்சிப்படைய தன்னை தேவன் நல்ல இடத்தில் அமர்த்தியுள்ளார் என்ற எண்ணத்தில் ஹீபர் வேலைகளை ஆரம்பித்தார்.

மிஷனெரி சங்கங்கள்

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பா நாடுகளிலிருந்து பல மிஷனெரி சங்கங்கள் இந்தியாவில் செயல்பட்டு வந்தன. அவைகள் புதிய பிஷப்பின் வருகைக்கு பயத்தோடும் மற்றும் ஆவலோடும் எதிர்பார்த் திருந்தன. முந்தைய பிஷப் போன்று தங்களின் செயல்பாட்டிற்கு ஆதரவு தராமலும் கடுமையாகவும் நடந்து கொள்வாரோ என கலங்கி ஜெபித்துக் கொண்டிருந்தனர். ஆனால் தேவனுக்கு மகிமை! என மிஷனெரி சங்கங்கள் மகிழ்ச்சியால் உரத்த சத்தமிட்டன. காரணம் புதிய பிஷப் ஒரு மிஷினெரி... அவர் மிஷினெரி

பிஷப்! மிஷினெரி சங்கங்களுக்கு தன் முழு ஆதரவையும், முழு ஒத்துழைப்பையும், தருவதாக பிஷப் ஹீபர் உடனடியாக அறிவித்தார், அச்சங்கங்களின் வேலைகளையும், சிறப்பாக சி.எம்.எஸ். பணிகளையும் பாராட்டினார்.

நமது இந்திய நாட்டில் அந்நாட்களில் எவ்வித சாலை போக்குவரத்து வசதிகளும் இல்லை, கடல் வழியோ அல்லது நதி மூலமாகவோ படகில் பயணம் செய்ய வேண்டும், கொல்கத்தாவில் செய்யப்பட வேண்டிய முக்கிய அலுவல்களை பார்த்து, சரி செய்ய வேண்டியவைகளை முடித்துவிட்டு, இந்திய திருமண்டலத்தை பார்வையிட பிஷப் ஹீபர் தனது முதல் பயணத்தை துவக்கினார், பெங்காலி லிருந்து பாம்பே வரை செல்லத் திட்டமிட்டார், கங்கை நதிவழியாக பயணத்தை தொடங்கினார், ஆங்காங்கே தரைவழியாகவும் பயணித்தார், பயணங்கள் கடினமானதாகவும், ஆபத்து நிறைந் ததாகவும் காணப்பட்டன, ஆக்ரா, டெல்லி, லக்னோ, பனாரஸ், அலகாபாத் என பல நகரங்களுக்கு சென்று ஊழியம் செய்தும் மக்களின் நிலைமைகளையும் நேரில் அறிந்து கொண்டார்,

இந்தப் பிரயாணத்தின் போது டெல்லியிலும், லக்னோவிலும் இருமுறை காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையானார். பம்பாயிலிருந்து கப்பலில் சிலோன் வரை சென்று பின்பு கொல்கத்தா திரும்பினார்.

சென்ற இடங்களில் எல்லாம் ஆலய அர்ப்பணிப்பு, சபை நிறுவுதல், பள்ளிகளை ஸ்தாபித்தல், கிறிஸ்தவ ஊழிய வளர்ச்சிக்கு ஆலோசனை வழங்குதல், நூற்றுக்கணக் கானோருக்கு திடப்படுத்துதல் ஆதாரனை, நிர்வாகப் பொறுப்பை நிறைவேற்றுதல் என அயராது உழைத்தார்,

வெயில் காலத்தில் கடுமையான வெப்பம், ஹீபரை மிகவும் களைப்படையச் செய்தது உடல் சோர்வடையவும் செய்தது.

பிஷப் ஹீபர் ஒரு சிறந்த கல்விமான், அது மட்டுமல்ல நல்ல எழுத்தாளர். ஒவ்வொரு கடிதங்களுக்கும் தானே விரிவான விளக்கத்தோடு பதில் எழுதியுள்ளார். தனக்கு தேவன் கொடுத்த பொறுப்பை உண்மையோடு நிறைவேற்றினார் என்பதை அவர் கடிதங்கள் நமக்கு சாட்சி சொல்லுகின்றன.

இந்திய நாட்டின்மீது கிழக்கு இந்திய கம்பெனியின் மனப்பான்மையும் பிஷப் ஹீபரின் மனப்பான்மையும் வேறுபட்டிருந்தது. கிழக்கு இந்திய கம்பெனியினர் இந்திய மக்களை பயன்படுத்தி பணம் சம்பாதிப்பதில் கவனமாய் இருந்தனர். ஆனால் பிஷப் ஹீபர் இந்திய மக்களின் தகுதியை உயர்த்தி சமூகத்தில் அவர்களைப் பயனுள்ளவர் களாக்க முயற்சித்தார்.

ஆதிவாசிகள்மேல் ஹீபரின் அன்பு

பிஷப் ஹீபர் இந்தியாவுக்கு மட்டுமல்ல, சிலோன், பர்மா என பல ஆசிய நாடுகளுக்கும் பிஷப் ஆக இருந்தார். கங்கை நதி வழியாக பயணம் செய்த பிஷப் ஹீபர் அந்நதிக் கரையில் அமைந்துள்ள பாகல்பூர் (Bhagalpur) என்ற ஊரின் அருகாமையில் காடுகளில் வாழ்ந்த மால்டோ (Maltose) என்ற ஆதிவாசி இனத்தை கண்டு மனதுருகினார். அவர்களுக்கு இயேசுவின் நற்செய்தி அறிவிக்கப்பட கிறிஸ்தியானையும் அவரது மனைவியையும் மிஷனெரிகளாக

அங்கு அனுப்பினர், அவர்கள் கிறிஸ்துவுக்காக அந்தக் காட்டுப்பகுதியில், மால்டோ இனமக்கள் மத்தியில் பன்னிரண்டு மாதங்கள் கடினமாக உழைத்தார்கள், பலன் ஒன்றுமில்லை, ஒருவர்கூட ஞானஸ்நானம் பெறவில்லை, பின் சோர்வுற்று இருந்த கிறிஸ்தியான் தம்பதியர் மலேரியாவால் பாதிக்கப்பட்டு ஒரு வார இடைவெளியில் இருவரும் இறந்து விட்டனர், மால்டோர் இனமக்கள் மத்தியில் ஆரம் பிக்கப்பட்ட ஊழியம் கிறிஸ்தியானின் உதவியாட்கள் (சுதேசிகள்) மூலம் தொடர்ந்தது, ஆனால் 1850ஆம் ஆண்டோடு ஊழியம் நின்று போனது.

பிஷப் ஹீபர், கிறிஸ்தியான் தம்பதியர் மரித்துப் போகவில்லை. அவர்கள் இந்த மண்ணில் விதைக்கப் பட்டார்கள். 100 ஆண்டுகள் கழித்து அதே பகுதியில் **FMPB** ஊழியம் செய்து திரு.ஜெயராஜ் அவர்களது மகன் லிவிங்ஸ்டன் வயது 1½ திரு.தேவதாஸ், திரு. ஜிம் எலியெட் ஆகியோர் ஊழியம் செய்து மலேரியாவால் பாதிக்கப்பட்டு கோதுமை மணியாக விதைக்கப்பட்டதால் மால்ட்டோ மக்கள் மத்தியில் தொடர் ஊழியத்தால் ஐம்பதாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். மேலும் 500 திருச்சபைகள் எழும்பியுள்ளன.

ஜார்கண்ட் பகுதியில் வாழ்ந்த மால்ட்டோ இன ஆதிவாசி மக்களை பிஷப் ஹீபர் நேசித்தார், இன்று திருச்சியில் பிஷப் ஹீபர் பெயரில் அமைந்துள்ள பிரபலமான பிஷப் ஹீபர் கல்லூரியில் மால்டோ இன மாணவர்கள் சிலர் படிக்கின்றனர், கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.

***

அத்தியாயம் -9

இறை பணிக்கென குருக்களை நியமித்தல்

ஜாஹனாவில் வாழ்ந்து வந்த டேவிட் கிறிஸ்டியன் என்ற தமிழனை, 1824ஆம் ஆண்டு திருத்துவ ஞாயிறன்று ஆங்கிலிக்கன் (Anglican) சபைப் போதகராக பிஷப் ஹீபர் தன் கைகளை அவர் தலையில் வைத்து அபிஷேகம் பண்ணினார். இந்திய திருச்சபை வரலாற்றில் இவர்தான் முதல் இந்தியன் ஆங்கிலிக்கன் போதகராக அபிஷேகம் பண்ணப்பட்டார்.

சிலோன் கவர்னரும், கொலம்போ மறைமாட்ட தலைவர் மற்றும் சர் எட்வர்ட் பான்ஸ் அவர்களும் மறைதிரு டேவிட் கிறிஸ்டியானை குறித்து நற்சாட்சி பகர்ந்தனர். கொல்கத்தாவில் உள்ள பிஷப் கல்லூரியில் குறுகிய காலம் இறையியல் படிப்பு படித்து, குருவாக தகுதியுள்ளவர் என்ற சான்றிதழைப் பெற்றவர். பிஷப் ஹீபர், டேவிட் கிறிஸ்டியானை, குரு வாக்குவதில் மிகுந்த மகிழ்ச்சியும் தேவனுக்கு நன்றியும் கூறி மகிழ்ந்தார். இந்திய தேசம் சுதேசி ஊழியர்களால் சந்திக் கட்டட வேண்டும் என தேவன் அவருக்கு உணர்த்தி யிருந்தார். இந்திய மக்களின் இரட்சிப்பிற்கு இந்தியர்களே பொறுப்பு என்று இதை வாசிக்கும் நமக்கும் இந்த நிகழ்ச்சி நினைப்பூட்டவில்லையா?

1825ஆம் ஆண்டு நவம்பரில் அப்துல் மசி என்பவரை போதகராவும் மற்றும் தலைவராகவும் அபிஷேகம் செய்து

வைத்தார். அப்துல்மசி போதக சமர்த்தனாகவும, ஊழிய வாஞ்சையுள்ளவராகவும் காணப்பட்டார்.

கிழக்கு இந்தியக் கம்பெனியில் ஆலயகுருவாயிருந்த சங்கை தானியேல் கோரி ஒரு நற்செய்தியாளர், மற்றும் ஊழியம் செய்வதில் தீவிரவாதி. தானியேல் அப்துல் மசியுடன் இணைந்து ஆக்ராவில் சி.எம்.எஸ். வேலைகளை 1813இல் ஆரம்பித்து ஊழியம் செய்துகொண்டிருந்தார். சிறப்பாக பணிசெய்து வந்ததினால் தானியேல்கோரிக்கு கொல்கத்தாவின் தலைமைப் போதகராக ஹீபர் பொறுப்பு கொடுத்தார்.

இப்படி நற்செய்தியாளர்களை பதவியில் அமர்த்தி ஒரு பெரிய நற்செய்தி இயக்கத்தை தொடங்கி வைத்தார், மிஷனெரி சங்கங்கள் வேலையை விரைவாக, விரிவாக்கம் செய்ய உற்சாகப்படுத்தினார், மிஷனெரிகளுக்கு அவர் வீடு எப்போதும் திறந்திருந்தது. பிரிட்டனின் ஷெராம்பூர் பாப்டிஸ்ட் ஸ்தாபனத்தை கொல்கத்தாவிற்கு மாற்றும்படி வேண்டினார், ஆனால் அவர்கள் அங்கு நன்கு வேருன்றி விட்டபடியால் மாற்றத்தை விரும்பவில்லை. சி.எம்.எஸ். எல்.எம்.எஸ். ஸ்காட்லாந்து மிஷன், அமெரிக்கன் எப்பிஸ்கோபல், பாப்திஸ்ட் பிரிஸ்பிட்டேரியன், மெத்தடிட்ஸ் போன்ற பெரிய சிறிய மிஷன் இயக்கங்கள் சில இந்தியாவில் வேலையை துவங்க திட்டமிட்டன. பல ஊழியங்கள் விரிவடைந்தன.

இதன் விளைவாக இதுவரை நடந்திராத அளவில், பள்ளிகள், விடுதிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், அனாதை இல்லங்கள், காப்பகங்கள் என வளர்ந்து பெருகின. அத்தோடு சுவிஷேச ஊழியமும் சேர்ந்து வளர்ந்தது. தாலந்துள்ள பல மிஷனெரிமார்கள் ஊழியப் பணி செய்ய முன் வந்தனர்.

சென்னை முதன்மை குருவான தாமஸ் ராபின்சன், பிஷப் ஹீபரை மிகவும் நேசித்து அவரை **"கீழ்த்திசை அப்போஸ்தலர்"** என குறிப்பிடுகிறார், லுத்திரன் ஊழியர்கள் பிஷப் ஹீபரை சென்னையில் திருச்சபையின் பொற்காலத்தை திரும்பக் கொண்டுவந்தவர் என்றும், ஆதி அப்போஸ்தலரின் ஆவியைப் பெற்றவர் எனவும் போற்றினர்.

சபைப்பாகுபாடு பார்க்காமல் மிஷன் சங்கங்களுக்கும், சபைகளுக்கும் பிஷப் ஹீபர் உதவிக்கரம் நீட்டினார், இதனால் அவைகளுக்கு இடையே ஒரு ஒற்றுமை வளர்ந்தது. எல்லா புராட்டஸ்டன் திருச்சபைகளும், மற்ற கிறிஸ்துவ சபைகளும் கொல்கத்தா பிஷப் ஹீபரின் குடையின்கீழ் ஒன்றாக இந்திய திருமண்டலமாக ஒன்றுபட்டன,

அல்லேலூயா!

"ஜாதி" பிசாசு

இந்திய நாட்டின் "சாபம்" என கூறப்படும் சாதிப் பிரச்சனையை பிஷப் ஹீபர் அதிகம் அறியாதவராக இருந்தார், சபைகளில் ஜாதிப் பிரிவுகள் தலைகாட்டவே,

Rev. டேவிட் கிறிஸ்டியானை அழைத்து சாதிப்பிரிவுகளையும் அது இந்திய மண்ணில் ஆழமாக வேருன்றி உள்ளதையும் அறிந்து கொண்டார், டேவிட் கிறிஸ்டியன் மூலம் ஜாதிப் - பிரச்சனைகளை - ஜாக்கிரதையுடன் கையாள வேண்டும் என எச்சரிக்கையும் பெற்றார்,

இந்திய மக்களும், தாழ்த்தப்பட்ட பிரிவினரும் பொருளாதாரத்தில், கல்வியில், வேத அறிவில் முன்னேற்றம் அடைந்துள்ள இன்றைய காலத்திலும் ஜாதியைச் சபை களிலிருந்து முழுமையாக விரட்டியடிக்க இயலாத நிலை உள்ளது, அன்று எப்படி இருந்திருக்கும், என்று நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள், தாழ்த்தப்படட மக்களின் முன்னேற்றம் குறித்தும், ஜாதிப் பிரச்சனையை எப்படிக் கையாளுவது, என்பது குறித்தும் செய்வதறியாது ஹீபர் தவித்தார்,

இதைப்பற்றிய தென்இந்திய மிஷனெரிகளின் கருத்தறிய தீர்மானித்து ஒரு குழுவை சென்னையில் அமைத்தார், இருபத்து நான்கு மிஷனெரிகள் பிஷப் ஹீபரின் கேள்விகளுக்குப் பதில் தந்தனர், SPCK, CMS, Wesleyan, LMS மற்றும் தனி மிஷன் என பலர் இடம் பெற்றிருந்தனர், திருநெல்வேலியில் உள்ள C.T.E. ரேனியஸ் அவர்கள் தானே முன்வந்து தேசத்தின் பல பகுதிகளிலிருக்கும் முப்பத்தைந்து மிஷனரிகளிடம் கருத்துக்களை கேட்டறிந்து அவைகளை பிஷப் ஹீபரிடம் சமர்ப்பித்தார்.

திருச்சபைகளில் ஜாதியைக் குறித்து எத்தகைய முடிவு எடுக்கப்படும் என அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்கி யிருந்தனர். கடவுள் மனிதனைப் படைத்தார், ஆணும், பெண்ணுமாக படைத்தார். அவர்களையும் சமமாகவே படைத்தார். படைத்தவரை வணங்குவதை விட்டுவிட்டு மனிதன் கடவுளைப் படைக்கத் தொடங்கினான், ஒவ்வொரு வருக்கும் விருப்பமான கடவுளைப் படைக்க முற்பட்டனர், இதன் விளைவாக ஆண்டானுக்கு ஒரு கடவுள், அடிமைக்கு ஒரு கடவுள், ஆதிவாசிக்கு ஒரு கடவுள் என ஜாதிப் பிசாசு தலையெடுத்தது, கடவுளின் பெயரால் ஜாதிகள் நிலைபெற்றன.

குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை யாவீர்கள், (யோவான் 8:36) "சத்தியத்தை அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32) இயேசு கிறிஸ்துவை அறிவதே சத்தியம், சதத்தியத்தை அறிந்த பின்னும் சமுதாயக் கட்டுகளிலிருந்து விடுதலை இல்லை என்றால், நாம் தேவனுடைய வார்த்தைக்கு எந்த அளவு மதிப்பு கொடுக்கின்றோம் என்பதை உணரவேண்டும்.

"வானமும் பூமியும் ஒழிந்தாலும் அவர் வார்த்தை ஒழியாது, மாறாது,"

மருத்துவமனையில் ஒருவர் உயிர் பிழைக்க இரத்தம் தேவைப்படும் வேளையில் நோயாளிக்குப் பொருந்தும் இரத்தமே அன்றி ஜாதியை நாம் பார்ப்பதில்லை, ஆராதனை வேளைகளில் நாம் அனைவரும் சேர்ந்து உண்மையோடு

ஆராதனை செய்கின்றோம், ஊழிய இடங்களில் ஆண்டுகள் பல ஒன்றாக இணைந்து பணி செய்கின்றோம், ஆனால் திருமணத்திற்கு மட்டும் ஆணி வேரையும், சல்லி வேர்களையும்-ஜாதியையும் ஜாதிப்பிரிவையும் தேடுவது ஏனோ!

"யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்கள் எல்லோரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா 3:28) ஏமாந்து போகவேண்டாம், கடவுளைக் கேலி செய்ய முடியும் என நினைக்காதீர்கள், ஒருவர் தாம் விதைப்பதையே அறுவடை செய்வார், (கலா 6:7),

வேத வார்த்தைகளை வல்லமையுள்ள கூராயுதமாக பிஷப் ஹீபர் பயன்படுத்தினார், சகோதரத்துவம், ஒருமைப்பாடு பற்றி, தெளிவாய்ப் பிரசங்கித்தார், திருவிருந்து எல்லோருக்கும் ஒன்றாகவே கொடுக்க உத்தரவிட்டார், ஜாதியைப் பற்றிய மிஷனெரிகளின் கருத்துக்களை தொகுத்து ஒன்றிணைத்து ஒரு தெளிவான கொள்கையை அறிவிப்பதற்கு முன் அவசரமாக சென்னையை நோக்கி செல்லும்படி தேவ அழைப்பு வந்துவிட்டது, அவர் விட்டுச் சென்ற பணிகளை, தேவன் நமக்கென நியமித்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்வோம்,

அத்தியாயம் - 10

தென்இந்தியாவில் சுற்றுப் பயணம்

பிஷப் ஹீபர் இரண்டாவது நீண்ட பயணமாக, கடல் வழியாக கொல்கத்தாவிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார், 1823ம் ஆண்டு மார்ச் 13ம் தேதி ஹீபர் சென்னையை விட்டு புறப்பட்டார், அவரது பிரயாணத் திட்டத்தில் கடலூர், பாண்டிச்சேரி, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மாவட்டங்கள் இருந்தன,

பாண்டிச்சேரிக்கு மார்ச் 17ம் தேதி வந்து சேர்ந்தார், அதிகமான பனைமரங்களும், மணலுமாகக் காட்சி அளித்த அந்தப் பகுதியில் ஹீபரோடு வந்தவர்கள் கூடாரம் போட்டு தங்கினர், அந்த இடம் பாண்டிச்சேரியிலிருந்து ஒரு மைல் தூரத்தில் இருந்தது, பாண்டிச்சேரியில் பொறுப்பாய் இருந்த பிரெஞ்சு போதகர் பார்டே பெவிஸ் என்பவர், தன்னுடைய பண்ணை வீட்டில் தங்கும்படி ஹீபரை வேண்டிக்கொண்டார், ஆனால் ஞாயிறு ஆராதனைக்காக கடலூர் செல்ல வேண்டியதிருப்பதால் அவருடைய வேண்டுகோளை அன்புடன் மறுத்து விட்டு அரசுக்குச் சொந்தமான இடத்தில் தங்கினார்,

அங்கே ஒரு ஆங்கிலேய அதிகாரியைச் சந்தித்தார், அவரது மனைவி இறந்த காரணத்தால் அவரது வீட்டுக்குச் சென்று அவரோடு கிறிஸ்துவ மதத்தின் ஆழமான சத்தியங்களை விளக்கிக் கூறி மரணத்திற்குப் பின் அவரது

மனைவியை பரலோகத்தில் சந்திக்கலாம் என்ற நம்பிக்கையைக் கொடுத்து ஆறுதல் படுத்தினார். அங்கிருந்து தன் இருப்பிடம் வந்து சேர சற்று தாமதமானாலும் அந்த ஆங்கிலேய அதிகாரி எல்லாவற்றையும் கருத்துடன் கேட்டது சந்தோஷமாக இருந்தது.

மறுநாள் அதிகாலை மூன்று மணி அளவில் கடலூர் புறப்பட்டனர். ஹீபருக்கு வழிகாட்ட தஞ்சாவூரிலிருந்து ஒரு இளம் ஆங்கிலேய அதிகாரி வந்திருந்தார். அந்த நாட்களில் சரியான போக்குவத்து வசதி இல்லாத காரணத்தால், வழி கண்டுபிடித்து செல்வது கடினம். குதிரையில் தான் பிரயாணம் செய்ய வேண்டியதாய் இருந்தது.

18ம் தேதி கடலூர் வந்து சேர்ந்தனர். அங்குள்ள மிஷன் மையம் தென்இந்தியாவில் உள்ள பழமையான மையமாகும். 1786-ல் தொடங்கப்பட்டதாகும். 1760ம் ஆண்டு மெட்ரர் கவர்மெண்டால், ஊழியம் செய்பவர்களுக்கு தானமாகக் கொடுக்கப்பட்ட இடமாகும். அதற்கு "பாதிரி கோட்டகம்" அல்லது "போதகர் பண்ணை" என பெயரிட்டு அழைத்தனர். தஞ்சையின் அருகில் ஒரு தீவு போல் அமைந்த இடத்தில் இப்பண்ணை அமைந்திருந்தது. கொள்ளிடம் ஆற்றுப்படுக்கையாக அது இருந்தது. பசுமையான இடம். பிஷப் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு உதவும்படி சில கிறிஸ்தவ பள்ளிகள், நிறுவவும் பழைய கட்டிட மராமத்துப் பணிகள், செய்யவும் பண உதவி செய்தார். அப்பகுதியின் தேவையை குறித்து

கிறிஸ்டியன் நாலெட்ஜ் சொஸைட்டிக்கு ஒரு கடிதமும் எழுதினார்.

அதுமட்டுமல்லாமல், கிறிஸ்தவர்களுக்கு வாங்கிய நிலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்து, விவசாயம் செய்ய பண உதவியும் கொடுத்து ஹீபர் உதவினார். அந்த இடம் கிறிஸ்தவர்கள் மட்டும் வசிக்கும் இடமாக மாறியது. ஹீபர் அந்த நிலத்தின் வளத்தை அறிந்திருந்ததால் அவர்கள் கொஞ்சம் உழைத்தாலே அந்த நிலத்தில் அதிக பலன் எடுக்க முடியும் என அறிந்திருந்தார்.

நம் இந்தியாவுக்காக ஹீபர் ஏறெடுத்த ஜெபம் என்ன தெரியுமா' "ஆண்டவரே! இந்த நாட்டில் ஆட்சி செய்கின்ற ஆட்சியாளர்களை ஆசீர்வதியும், பூமி கொடுக்கத் தவறிய எல்லா பலன்களையும் பரலோகத்திலிருந்து திரும்பத் தாரும், விளைச்சலில் சரியான விகிதத்தில் அவர்களுக்குப் பங்கு கிடைக்க உதவும், யாரும் அதைத் தட்டி பறிக்கக் கூடாது" என ஜெபிப்பார், இந்திய மக்கள் மீது அவருக்கு இருந்த பாசம். இதன்மூலம் தெரிகிறதல்லவா! குறுநில மன்னர்கள், ஏழை இந்தியர்களின் உழைப்பை சுரண்டுவதைக் கண்டு மனம் கொதித்தார்,

தஞ்சாவூரில், பெரிய வெள்ளிக்கிழமையை ஆசரிக்க நினைத்து சிதம்பரத்திலிருந்து புறப்பட்டு காலை ஏழு மணிக்கு கும்பகோணம் வந்து சேர்ந்தனர், கும்பகோணத்தில் காலை ஆராதனையில் ஹீபர் செய்தி கொடுத்தார், தஞ்சாவூர்

மிஷனைச் சேர்ந்த கிராம சுவிசேஷகர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேர்ந்தது. அவரிடம் மிஷன் காரியங்களை அதிகம் கேட்க முடியாவிட்டாலும், சுவிசேஷகரின் தனிப்பட்ட குடும்பம், பிள்ளைகள், அவரது வேலைகளைக் குறித்து அறிந்து கொண்டார். மேலும் சில கிராம சுவிசேஷகர்கள் தரங்கம்பாடியிலிருந்து வந்து பிஷப்பை பார்க்க வந்தனர். அவர்கள் தரங்கம்பாடிக்கு வரும்படி ஹீபரை அன்புடன் அழைத்தனர். அதிக அலைச்சலினால் களைத்துப் போயிருந்த ஹீபர் அவர்களிடம் "நிச்சயம் அவர்களைப் பார்ப்பேன் ஆனால் இங்கல்ல! பரலோகத்தில்" என சிரித்தபடி சொல்லி அனுப்பினார்.

மார்ச் 25ம் தேதி ஷீபர் தஞ்சாவூர் வந்தார், ஹீபரின் நாட்குறிப்பில் சுவாட்ஸ் ஐயர் தஞ்சாவூர் சமஸ்தானத்தில். சரபோஜி மன்னருக்கு ஆதரவாக ஆலோசனைகளை சொல்வதில் வல்லவராக இருந்தார். பல ஆலயங்களைக் கட்டுவதற்கும் உறுதுணையாக இருந்தார் என்று குறிப்பிட்டு இருந்தார்,

சுவாட்ஸ் ஐயரின் கல்லறையைப் போய்ப் பார்த்தார், சரபோஜி மன்னர் சுவாட்ஸ் ஐயரை கௌரவப்படுத்த ஆங்கிலக் கவிதை ஒன்றை நினைவுக்கல்லில் பொறித்திருந்ததைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

சுவாட்ஸ் ஐயரின் கல்லறையில் சரபோஜி மன்னரால் எழுதப்பட்ட வாசகம்

Sacred to the memory

of the

Reverend christian Fredrick Schwartz,

Missionary to the Honourahle Society

for Promoting Christian Knowledge

in London,

Who departed this life

on the 13th of February 1798

Aged 71 Years and 4 months.

Firm wast thou, humble and wise,

Honest, pure, free from disguise:

Father of orphans, the widow's support,

Comfort in Sorrow of every sort,

To the benighted dispenser of light,

Doing and pointing to that which is right,

Blessing to Princes, to people, to me,

May, I my father, be worthy of thee,

Wishes and prayeth thy Sarabojee.

சுவாட் ஐயர் 1708ம் ஆண்டு மரணம் அடைந்திருந்தார்.

கோட்டையில் உள்ள ஆலயத்தில் ஹீபர் உயிர்தெழுந்த ஞாயிறன்று (Easter) பிரசங்கம் செய்தார். அன்று அவர் எடுத்த வேதபகுதி வெளி 1:8 இருக்கிறவரும், இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள கர்த்தர் நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக் கின்றேன்" என்பதாகும். ஆலயத்திற்கு வந்த பல இந்திய கிறிஸ்தவர்கள் ஆங்கில மொழி தெரிந்தவர்களாக இருந்தபடியால் அவர்களுக்கு பிரசங்கத்தை பிரதிகளாக எடுத்து விநியோகம் செய்தார். அது மட்டுமல்ல அதே பிரசங்கத்தை, தமிழில் மொழிபெயர்த்து ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு கொடுக்கவும் உதவினார். கர்த்தருடைய வார்த்தைகளை இந்திய நாட்டுமக்கள் தெளிவாக அறியவேண்டுமே, என்ற பாரத்தினால் இவைகளைச் செய்தார். மாலை ஆராதனையில் அதே ஆலயத்தில் டாக்டர். காம்மெரா என்பவர் தரங்கம்பாடியிலிருந்து வந்தார் அவர் செய்தி கொடுக்க பிஷப் ஹீபர் தமிழில் ஆசீர்வாதம் கூறி ஆராதனையை நிறைவு செய்தனர். அன்று ஆலயத்துக்கு வந்த சபையார் ஆயிரத்து முன்னூர் பேர் இருந்திருப்பார்கள் என செய்திக்குறிப்புக் கூறுகின்றது.

பிஷப் ஹீப்பருக்கு அந்த ஆலய ஆராதனை வெகுவாக கவர்ந்தது. சபைமக்கள் அனைவரும் சேர்ந்து பாடியது. 100ஆம் சங்கீதத்தை வாய்விட்டு ஒரே சத்தமாய் வாசித்தது. அனைவரும் ஒரே குரலில் ஆமென்! என

பக்தியுடன் கூறியது என அத்தனையும் ஹீபரை அதிக மகிழ்ச்சியுள்ளாக்கியது, இப்படிப்பட்ட ஒரு ஆராதனைக்காக ஹீபர் பல நாட்களாக ஏங்கிக்கொண்டு இருந்தார், அவரது கனவு தஞ்சாவூரில் நிறைவேறியது.

மார்ச் 27ம் தேதி தஞ்சைக்கோட்டை ஆலயத்தில் திடப்படுத்தல் ஆராதனை நடந்தது. திரு.கோலாப் என்பவர் தமிழில் செய்தி அளித்தார். சுமார் இருநாறுபேர் ஆராதனையில் பங்கு பெற்றனர். ஏழுபோதகர்களும் இருந்தனர், புறப்படு முன் ஸ்வாட்ஸ் ஐயர் கல்லறையின்முன் நின்று ஜெபித்தார்கள்.

பிஷப்ஹீபருக்கு தஞ்சாவூர் ராஜா சரபோஜியிடமிருந்து தர்பாருக்கு வரும்படி அழைப்பு வந்தது, பிஷப்ஹீபரும் உதவியாளர்களுடன் சென்றார். ஆடம்பரமான அலங்காரமான ஒரு பெரிய ஹாலில் ராஜா சரபோஜி நடுநாயகமாய் அமர்ந்திருக்க அவரது மகன் அருகில் அமர்த்தப் பட்டிருந்தார், மேலும் சில கிறிஸ்துவ சகோதரர்களுக்கு இராஜாவின் வலப்புறம், இடப்புறம் ஆசனமிட்டு அமரச் செய்திருந்தார், ஸ்வாட்ஸ் ஐயர் காலத்திலிருந்தே கிறிஸ்தவர் களுக்கு தனி மரியாதையும் அவர்கள் ஆலோசனைகளுக்கு தனி மதிப்பும் இருந்தது, தனி மனிதனின் சாட்சியுள்ள வாழ்க்கையால், கிறிஸ்தவ சமுதாயமே, ஒரு இந்து மன்னரால் கௌரவிக்கப்படுவதைக் காணமுடிகின்றது ராஜாவுடன் பல பொதுவான காரியங்களை பேசிவிட்டு ஹீபர் வந்தார், ஊழியர்களுடன் பேசி அவர்களது கஷ்டங்கள் தேவை களைக் குறித்து ஆலோசனை நடத்தினார்,

பின் தஞ்சாவூர் ராஜாவான சரபோஜிக்காக, அவரது ஆட்சிக்காக ஒரு ஜெபத்தை எழுதி அதைத்தமிழில் மொழிபெயர்த்து எல்லா கிறிஸ்தவ ஆலயங்களிலும், ஜெபிக்கும் படியாக ராபின்சன் என்பவருக்கு செய்தியை அனுப்பினார், அந்த ஜெபம் என்ன வென்று தெரிந்து கொள்ள ஆர்வமாய் இருக்கின்றீர்களா? இதோ!

"பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே! நன்மையான எல்லா ஈவுகளையும் உமது பொக்கிஷத் திலிருந்து சரபோஜிராஜாவுக்கும் அவரது குடும்பத்தினர் மற்றும் அவரது வம்சா வழியினருக்கும், நீர் செய்கின்ற நன்மைகளை நினைந்தருளும். அவர் நீண்ட நாள் வாழவும், அவருக்குப் பொருளுதவியும் ஆயுசு நாட்களையும் தந்து வழிநடத்தும் எல்லா ஆபத்திலிருந்தும் விலக்கிக் காத்தருளும் ராஜாவுக்கும் அவரது மகனுக்கும் பெயரனுக்கும் எல்லா கனத்தையும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நீர்தர வேண்டு மென ஜெபிக்கின்றேன், உலகம் தரக்கூடாத சமாதானத்தை தாரும். மேலும் சத்தியத்தை அறிகிற அறிவையும் நித்ய மகிழ்ச்சியையும் நமது மீட்பராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் தரவேண்டுமென் ஜெபிக்கின்றேன், ஆமென்!" இந்த ஜெபத்தை ஹீபரும் தன் தனிப்பட்ட காலை தியான நூலில் இணைத்து ஜெபித்தார், இதுபோல தஞ்சாவூர் ராஜாவான சரபோஜிக்கு தனியாக ஒரு ஜெபம் எழுதி ஜெபிக்கலானார்,

தஞ்சாவூரில் அப்போது இரண்டு மிஷினெரிகள் மட்டுமே இருந்தனர், மிஸ்டர் கோலோப் நல்லதொரு

ஊழியராய் இருந்தும் ஊழியம் செய்வதில் அவர் கையாண்ட முறைகளாலும், அதிக வயது காரணமாகவும் அதிகக்கனிகள் காணஇயலவில்லை, ஆகவே உள்ளூரிலிருந்து மூவரை ஊழியராகத் தேர்ந்தெடுக்க வேண்டியதாய் இருந்தது. பிஷப் ஹீபர் ஊழியப்பகுதிகளை ஏழாக பிரித்து அவைகளுக்கு தனித்தனியாக போதகர்மாரை அமர்த்தினர், அப்போது வேதநாயக சர்ஸ்திரியார் என்ற உள்ளூர் ஊழியரைப்பற்றி அறிந்தார். தமிழில் கர்த்தராகிய கிறிஸ்துவை குறித்த பாடல்களை எழுதுவதில் சிறந்தவராகக் காணப்பட்டார். அவருக்கு சம்பளத்தைக் கூட்டும்படி ராஜாதானிக்கு கடிதம் அனுப்பினார். சாஸ்திரியார் கிறிஸ்த்துவ மற்றும் புறமதத்தினரின் மதிப்பைப் பெற்றவராகக் காணப்பட்டார், அவரைச்சுற்றிலும் அறிவு நிரம்பியவர்கள் இருந்தனர், அவரது வேலைகளும் சமுதாயத்தின் தேவை களைச் சந்திக்கும்படியாக இருந்தது அவரது பாடல்கள் எல்லாராலும் விரும்பி பாடப்பட்டன, நல்ல ஒழுக்கம் மத நம்பிக்கையைக் குறித்ததான பாடல்களை அவர் எழுதியிருந்தார்,

மதுரை, இராமநாதபுரம் ஆகிய இடங்களில் ஆலய கட்டுமான பணிகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன, அதற்கு மெல்லோ என்பவர் பொறுப்பாக அமர்த்தப்பட்டார்.

கன்னியாகுமரியில் மீன்பிடிக்கும் மக்கள் சுமார் 10,000பேர் இருந்தனர், இவர்கள் முத்தெடுக்கும் தொழிலும் செய்தனர். அவர்கள் மத்தியில் கோவாவிலிருந்து வந்த கத்தோலிக்க

பாதிரியார் ஊழியம் செய்துவந்தார், அப்பகுதிகளிலும் புராட்ட்டண்ட் கிறிஸ்தவர்கள் பல பள்ளிகளை ஏற்படுத்தி இருந்தனர், ஆகவே அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் அங்குள்ள ஆலயங்களில் பங்குபெற்று கர்த்தரை தொழுதுகொண்டனர், இச்செய்திகள் பிஷப்ஹீபருக்கு வந்தன, ஆகவே இந்தியாவின் தென்கோடி வரை உள்ள கிறிஸ்தவர்களின் நிலை ஓரளவு ஹீபருக்குத் தெரிந்தது,

அன்று மாலை ஹீபர் தங்கியிருக்கும் இடத்தில் பாடகர் குழு ஒன்று வந்து அழகிய பாடல்களைப் பாடினர். குறிப்பாக இரண்டு பிராமணர்கள் மிகவும் கடினமான ராகங்களை, எளிதாகப் பாடியது ஆச்சரியமாக இருந்தது என ராபின்சன் வியந்து பாராட்டினர், ஆனால் ஹீபர் மட்டும் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார், காலையிலிருந்து தொடர்ந்து அவரை சந்திக்க, ஆலோசனை கேட்க ஆட்கள் வந்தபடி இருந்தனர், ஓய்வில்லாமல் அவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கிய ஹீபர் எல்லா ஆலயங்களையும் பராமரிப்பது என் தலையில் விழுந்த கடமையாய் இருக்கின்றது என்ற உணர்வுடன் செயல்பட்டார், ஏனென்றால் அவருக்கான ஜீவகிரீடமும், மகிமையும் பரலோகில் அல்லவா, காத்திருக்கிறது!. மார்ச் 30ல் பிஷப்ஹீபர், ராஜாவின் நூலகத்தை (சரஸ்வதி மஹால்) பார்க்கத் தனிப்பட்ட முறையில் சென்றார், ஹீபருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை, ஏனெனில் பிரெஞ்ச், ஆங்கிலம், ஜெர்மன், கிரீக் லத்தீன்மொழியில் சிறந்த நூல்கள் மற்றும் மராட்டி, சமஸ்கிருத மொழியிலும் நூல்கள்

அங்கிருந்தன. மராட்டிய மன்னர்களான சிவாஜி, ஷாஜியின் பெரிய ஓவியங்கள் அங்கு வைக்கப்பட்டு இருந்தன. யானையின் பெரிய எலும்புக்கூடு (தந்தத்தினாலானது) அங்கிருந்தது. மருத்துவம் சம்பந்தப்பட்ட நூல்களும் அங்கிருந்தன. சமீபகாலமாக ஹீபர் மருத்துவ நூல்களை ஆர்வமாகப் படித்துவந்தார். ராஜாவின் பளிங்குக்கல் சிலை ஒன்று ஒரு பெரிய கூடத்தின் நடுவில் இருந்தது.

இப்படி பல அரிய பொருட்களின் சேகரிப்பைப் பார்த்தபின் பிஷப்ஹீபர் நேராக மிஷன் வீட்டுக்குச் சென்றார். அங்கு மிஷனின் தேவைகள், விருப்பங்கள், குறித்து ஆலோசனைகள் நடத்தினார். அவருடைய முக்கியமான வேலைகளில் ஒன்று தஞ்சாவூரில் உள்ள மிஷன் வேலைகள். முதலாவது, புதிய ஆலயம் ஒன்று கட்டவேண்டும். பழைய ஆலயத்தை முழுவதுமாக மராமத்துவேலை செய்ய வேண்டும் என்பதாகும். அதற்கான திட்டங்கள் படங்களை வரைந்து முக்கியமான பகுதியில் ஒட்டிவைத்துவிட்டார். அங்கிருந்த ஆறுபேர் வேதாகம கல்லூரியில் படிக்க வேண்டும். அவர்கள் படிக்க வேதாகம கல்லூரியினையும் உருவாக்க வேண்டும். மேலும் சபைக்கான பரிசுத்த நடவடிக்கைகளை அறிய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். மிஷினெரிகள் தங்க புதுவீடு உருவாக்க வேண்டும் என நினைத்தார். குறிப்பாக இந்தியாவின் தென்பகுதியில் ஹீபர் சுற்றுப்பயணம் செய்த இடங்களில் ஆத்தும அறுவடைக்கான வாய்ப்பு அதிகம் இருப்பதை மனக்கண்களால் உணர்ந்தார்.

1826ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி பிஷப் ஹீபர் தஞ்சாவூரிலிருந்து சுமார் 60கிலோமீட்டர் தூரத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி வந்து சேர்ந்தார். அங்கு நீதிபதியாய் இருந்த பேர்ட் என்பவர், ஹீபரை அன்புடன் வரவேற்றார். அங்கே 490 கிறிஸ்தவர்கள் உபதேசியாரால் போதிக்கப் பட்டுவந்தார்கள் அது ஒரு சிறிய தமிழில் ஆராதனை செய்யும் ஆலயமாகக் காணப்பட்டது. 1824ம் ஆண்டு திருச்சியில் டோரன் என்ற ஆங்கிலேய போதகர் பணி செய்தார். பின் கடலூர் போய் விட்டார். அதற்குப்பின் யாரும் வரவில்லை. அப்போது மாதக்காணிக்கை 30ரூபாய் கிடைக்கும். திருச்சியில் தங்கி ஊழியம் செய்ய ஒரு குருவானவர் தேவை என ஹீபர் உணர்ந்தார். ஏப்ரல் 2ம் தேதி காலை திருச்சிராப்பள்ளியில் உள்ள அரசு பொறுப்பில் உள்ள ஆலயத்தில் (தூய யோவான் ஆலயம்) பிஷப் ஹீபர் பிரசங்கம் செய்தார். மதியம் 42 பேருக்கு திடப்படுத்துதல் நடத்தி அவர்களுக்கு அருமையான செய்தியை வழங்கினார். ஆராதனை முடிந்ததும் நீதிபதி பர்ட் வீட்டுக்குச் சென்றார். இந்தச் சுற்றுப் பயணத்திலேயே முதல்முறையாக, "அப்பா! தலைலேசாக வலிக்கிறது" என்று கூறியபடிகளைத்திருப்பதை உணர்த்தினார். மற்றபடி யாரையும், எதைக்குறித்தும் எப்போதும் குறைபட்டுக் கொள்ளும் சுபாவம் ஹீபருக்கு இல்லை. அன்று வழக்கத்துக்கு விரோதமாக வெயில் அகோரமாக அடித்தது அனல் காற்று வீசியது. உஷ்ணம் ஏறிக்கொண்டுபோனது.

ராபின்சன் என்ற குருவானவர், பிஷப் கூடவே இருப்பவர், அவரும் வெயிலினால் பாதிக்கப்பட்டார் தொடர்ந்து இருந்ததால் அதிக அலைச்சலினால் களைப்புற்று, சுகவீனப்பட்டார், ஹீபர் அவரைப்பார்த்து, 'ராபின் நீங்கள் போய் படுத்து ஓய்வெடுங்கள்,' என்று அன்புடன் கட்டளை இட்டு தானும் அவர் அருகில் அமர்ந்து, சில கடிதங்களை வாசித்துக் காட்டினார், மலபார் பிஷப்களுக்கு கையினால் கடிதம் எழுதிவிட்டு ஒரு பாமாலைப் பாடலை அவர் பாடினார், ஒருமுறை அல்ல பலமுறை அப்பாடலை பாடிக்கொண்டே இருந்தார்,

அது?

Head of the Church triumphant!
We joyfully adore thee

என்ற பாடல் ஆகும்,

ஏப்ரல் 3ந்தேதி திருச்சி கோட்டையில் உள்ள மிஷன் ஆலயத்திற்கு உற்சாகமாகச் சென்றார், ஆலயத்தில் தமிழில் தான் ஆராதனை நடந்தது, 15 கிறிஸ்தவர்கள் இருந்தனர், ஹீபர் அவர்களுக்கு கர்த்தரின் செய்தியைப் பகிர்ந்து கொண்டார், மிஷன் வீட்டுக்குச் சென்று திருச்சியில் உள்ள பள்ளிகளின் நிலை குறித்து விசாரித்தார், பிஷப் ஹீபர் மூடிய கோச் வண்டியில் கோட்டை ஆலயத்திற்குச் சென்றதால் சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து தப்பித்துக் கொண்டார், ராபின்சன் சுகவீனப்பட்டுப்போனதால், டோரன்

என்பவர் பிஷப் கூட துணையாகச் சென்றார். பிஷப்ஹீபர் தான் கண்ட சின்னச்சின்ன ஆலயங்கள் ஒரு வசதியும் இல்லாத நிலையிலும், சந்தோஷமாக இருப்பதைக் கண்டார். பாரத்தோடு வரும் ஆத்துமாக்களுக்கு கர்த்தரைக் குறித்து சொல்லும் உபதேசிகள், அங்கு வாழும் ஏழ்மையில் உள்ள உள்ளூர் கிறிஸ்தவர்கள், அவர்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளியின் நிலை, என எதைப் பார்த்தாலும் ஹீபரின் மனம் உருகிற்று. இவர்களுக்கு எதையாவது செய்யவேண்டு மென ஏங்கினார். கோட்டையில் ஆராதனையை முடித்தபின் நீதிபதி பார்ட் வீட்டுக்கு வந்தார். சட்டையை மாற்றுமுன், சுகவீனமாய் இருந்த ராபின்சனை போய்ப்பார்த்து மிகுந்த உற்சாகத்துடன் டயோசிஷனின் நிலை குறித்துச் சொன்னார். அவரது உற்சாகத்தில் சரீரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு வெளியே தெரியவில்லை.

ராபின்சன் அறையிலிருந்து புறப்பட்டு தனது அறைக்குச் சென்று, துணியைக்களையுமுன் மேசையில் அமர்ந்து ஏப்ரல் 3-1826 என எழுதிவிட்டு குளியலறைக்குச் சென்றார். குளிர்ந்த நீரில் நெடுநேரம் குளித்தார், அரைமணிநேரம் ஆயிற்று, மதிய உணவுக்காக் வீட்டில் உள்ளோர் காத்திருந்தனர், வேலைக்காரனுக்கு சந்தேகம் ஏற்படவே, குளியலறைக் கதைவை அழுத்தி தள்ளியபடி உள்ளே சென்று பார்த்தபோது, குளியலறைத் தொட்டியில் பிஷப் ஹீபரின் வெள்ளை உடல் அசையாமல் கிடந்தது.

மேலிருந்து குழாய்நீர் கொட்டிய படி இருந்தது. வேலைக்காரனுக்கு என்ன செய்வது! என புரியாமல் அருகில் வந்து பார்த்தபோது கண்கள் மென்மையாக மூடி இருக்க ஹீபர் ரோஜா மலரைப் போல பரலோகம் சென்று விட்டது புரிந்தது. வேலைக்காரர் ஓடிப்போய் நீதிபதி பாட்டியிடம் அறிவித்தான். மருத்துவர்கள் வந்து சோதித்தனர். அளவுக்கு அதிகமான வேலையும் வெயிலினால் ஏற்பட்ட பாதிப்பிலும் **(Sur. Stroke)** அவர் இறந்து விட்டார் என மருத்துவ உலகம் கூறிற்று. ஆனால், கர்த்தரை தன் முழு இருதயத்தோடு நேசித்தவர், தனக்கென கொடுக்கப்பட்ட வேலையில் முழு அர்ப்பணிப்புடன் செய்யத்துடித்தவர், மனித இனத்திற்கு நல்ல மேய்ப்பனாக இருந்து, கவனமாய் அவர்கள் குறைகேட்டு, தன்னால் இயன்றவரை அதை நீக்க முயற்சியெடுத்தவர், ஏழை கிறிஸ்தவர்களை தன் சகோதரராய் பாவித்த அவரை கர்த்தர், "போதும்! போதும்! என் மகனே! நீ வா! உனக்கான ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள், எனக் கூவி அழைத்ததும் அப்படியே எல்லாவற்றையும் போட்டு விட்டு, பரலோகத்தை நோக்கிப் பறந்து விட்டார் என ஆவிக்குரிய உலகம் சாட்சி கூறியது. அவர் இறந்த அன்று சென்னையிலும் கல்கத்தாவிலும் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டன.

கர்த்தரின் அழைப்பு எப்போதிருந்தாலும் உடனே செல்லும்படி எப்போதும் ஆயத்தமாய் இருந்தார் போலும்,

ஆஹா, எப்போர்ப்பட்ட அழைப்பு! எப்போர்பட்ட விடுதலை, புறாவைப்போல செட்டைகளை அடித்தபடி, சென்றுவிட்ட பிஷப் ஹீபர் அவர்களே! உம்மை நாங்கள் மறக்கவில்லை, இதோ! உமது வாழ்வை பலரும் அறியும்படி இந்த நூலை சமர்பிக்கின்றோம், நன்றியுடன் நினைக்கின்றோம்.

தேவன் இவ்வுலகில் நம்மை வாழ அனுமதித்திருக்கும் காலத்தில் சலிப்பில்லாமல், முழுமனதுமடன் முயன்று அவர் நோக்கத்தைச் செய்ய தீர்மானிப்போம், ஜீவ கிரீடத்தைப் பெற, நமக்கு நியமித்திருக்கும் ஓட்டத்தில், பொறுமையோடு ஓடுவோம்.

அத்தியாயம் - 11

மரணத்திற்குப்பின். . .

பிஷப் ரெஜினால்ட்ஹீபரின் உடலுக்கு, அடக்க ஆராதனை ஏப்ரல் 4ம் தேதி திருச்சி கன்டோன்மெண்ட் புனித யோவான் ஆலயத்தில் நடந்தது. ஹீபர் கூடவே பிரயாணம் செய்த குருவானவர் தாமஸ் ராபின்சன், மனதை உருக்கும்படியான ஒரு செய்தி கொடுத்தார், அதன்பின் கவர்கனர் ஜெனரலின் உத்தரவுபடி 42 குண்டுகள் முழங்க அவரது உடல் அதே ஆலய மைய பீடத்தின் வடபகுதியில் நல் அடக்கம் செய்யப்பட்டது இன்றும் அக்கல்லறை உள்ளது.

பிஷப் ஹீபர், எல்லாராலும் சுலபமாக சந்திக்கக்கூடிய எளிமையான மனிதராக இருந்தார். எல்லாரும் அவரை நெருங்கி பேசமுடியும். கல்கத்தாவின் தலைமை நீதிபதியாக இருந்த திரு. சார்லஸ்கிரே ஹீபரின் குணநலன்கள் பற்றி அவர் மிகவும் இனிமையானவராகவும், கனிவானவராகவும், பொறுமை உள்ளவராகவும், தன்னலம் இல்லாதவரலாகவும் விளங்கினார் என்று கூறினார்.

அவரது பாதங்கள், சுயநலத்திற்காக சுயபெருமைக்காக அலையாமல், நற்செய்தி அறிவிக்கத் துரிதப்படும் அழகிய பாதங்களாகக் காணப்பட்டன, அவரது மரண செய்தி திருமண்டலம் முழுதும் அதிர்ச்சியைத் தந்தது, ஆங்காங்கே புலம்பல் ஓலம் ஓங்கிக் கேட்ட வண்ணம் இருந்தது, மக்கள் ஒருவரை ஒருவர் தேற்றமுடியாமல் தவித்தனர், 43 வயது வாலிபராக இருந்தவர் அதற்குள்ளாக மரித்து விட்டாரே! என்ற ஆதங்கம் எல்லார் மனதிலும் நிரம்பி இருந்தது,

ஹீபரின மரணச் செய்தி இங்கிலாந்து தேசம் போய்ச் சேர 5 மாதங்களானது. செய்தியினைக் கேட்ட ஹீபரின் ஆலய வட்டாரமான ஹோட்நட் மக்கள் துயரத்தில் மூழ்கினர்.

ஹீபரின் எழுத்துக்கள் விலைமதிப்பற்றதாகக் காணப் பட்டன. குறிப்பாக அவரது ஐரோப்பிய சுற்றுப்பயணங்கள் மற்றும் இந்திய கிறிஸ்தவர்களின் சபையின் நிலை குறித்தும் தெளிவாக எழுதிய முதல் நபர் ஹீபர் ஆவார். ஒரு குருவானவர் பார்வையில், புதிய கிறிஸ்தவர்களின் நிலை எப்படி இருந்தது, என்று அதுவரை அறியாதவர்களுக்கு ஹீபரின் கடிதங்கள் படம் பிடித்துக் காட்டியது போல இருந்தது, புத்தக வெளியீட்டாளர்கள் அப்படிப்பட்ட அரிய பொக்கிஷங்களை விடுவார்களா! அத்தனையும் இணைத்து நூலாக மாற்றிவிட்டனர்,

ஹீபரின் அற்புதமாக அனேக நினைவுக்குறிப்புகள் கொல்கத்தாவிலுள்ள பேராலயத்தில் உள்ளன, பிஷப் கல்லூரி கொல்கத்தாவில் உள்ளது, மேலும் சென்னையிலும், திருச்சி செயிண்ட் ஜான் ஆலயத்திலும் உள்ளது, திருச்சி நகரத்தில் மையப்பகுதியில் உள்ள ஒரு முக்கிய சாலைக்கு பிஷப் ஹீபர் சாலை என பெயரிடப்பட்டுள்ளது, எஸ்.பி.ஜி, கல்லூரியினை பிஷப் ஹீபர் கல்லூரி என பெயரிடப்பட்டு உள்ளது, அது நகரத்தின் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாகக் கொடிகட்டிப் பறக்கிறது, மேலும் இரண்டு மேல்நிலைப் பள்ளிகள் ஒன்று தெப்பக்குளத்திலும், மற்றொன்று புத்தூரிலும் மாணவர்களுக்கென அமைக்கப்பட்டு மாணவர்களின் தனித்திறமையை வெளிக்கொண்டுவரும் சிறந்த பள்ளிகளாக, பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளிகள் திகழ்கின்றன,

சென்னையில் உள்ள சென்னை கிறிஸ்தவ கல்லூரி விடுதி ஒன்றிற்கு பிஷப் ஹீபர் விடுதி என பெயரிட்டுள்ளனர். இப்படியாக கிறிஸ்தவ மக்கள் பிஷப் ஹீபரை மறக்க முடியாமல் தவித்து மனதில் பட்ட இடங்களுக்கு அவர் பெயரை இட்டு வாய் இனிக்க அவர் பெயரை உச்சரிப்பதில் திருப்தி கொள்கின்றனர்.

பிஷப் ஹீபர் இங்கிலாந்தில் வாழ்ந்த, ஊழியம் செய்த, இடங்களை நேரில் சென்று பார்த்துவர கர்த்தர் கிருபை செய்தார் என பிஷப் ஹீபர் கல்லூரி முதல்வர் டாக்டர், பால் தயாபரன் அவர்களும், திருச்சி-தஞ்சை திருமண்டல பிஷப் டாக்டர், பால் வசந்தகுமார் அவர்களும் கூறி மகிழ்ந்தனர். பிஷப் ஐயா ஹீபரின் கொள்ளுப் பேரனின் பேரன் வாழும் மிகப்பெரும் வீட்டைப் பார்த்து பிரமித்துப் போனோம் என்றனர். அது 70 அறைகளுக்கு மேல் இருக்கும் ஒரு பண்ணை வீடு. கர்த்தருக்கு ஊழியம் செய்தவரின் சந்ததியை தேவன் எப்படியாக ஆசீர்வதித்துள்ளார் என்று பிஷப் கூறி தேவனைத் துதித்தார்கள்.

இங்கிலாந்து தேசத்திலிருந்து, இந்தியதேசம் வந்து இங்குள்ள கிறிஸ்தவமக்களுக்கும், மற்றுமுள்ள மக்களுக்கும் தன்னால் இயன்றவரை நன்மைகளைச் செய்தார்- ரெஜினால்டுஹீபர். அவருக்கு இந்திய மக்கள் மீது ஏற்பட்ட கரிசனை அலாதியானது. அவரது பதவியை துஷ்பிரயோகம் செய்யாமல் ஏழைகளுக்கு, விதவைகளுக்கு, ஊழியருக்கு உதவிகள் செய்தார். மக்களின் வேதனைகளைக் காது கொடுத்துக்கேட்டு, ஆறுதல் செய்தார். இன்னும் இந்திய மக்கள் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்று வாழ்கின்றார்.

வாலிப வயதில் தான் மேற்கொண்ட பணியில் உண்மையும், உத்தமமுமாய் செய்த பிஷப் ஹீபர் வாழ்வு இன்றைய வாலிப மக்களுக்கு ஒரு சவால்! உங்களை நம்பி இருக்கும் இச்சமுதாயத்திற்கு கிறிஸ்தவ அன்பை வெளிப் படுத்துவதில் உண்மையாய் இருப்பீர்களா! உங்களுக்காக பரலோகத்தில் ஜீவகிரீடம் மட்டுமல்லாது, ஒரு வெண்ணங் கியும், ஒரு வாத்தியமும் காத்திருக்கும், தவறவிடாதீர்கள்!.

REFERENCES

1. The Life of Reginald Heber, Lord Bishop, Calcutta-II by Amelia Heber (widow).
2. Narrative of a Journey through the Upper Provinces of India-I by Reginald Heber.
3. Biography of Reginald Heber, Lord Bishop of Calcutta, Abridged for the use of young persons – Google.
4. N.M.S. News Vol. VI, May 2010, Issue No.5.
5. Journal of Hindu-Christian studies – Geottery Cook. Vol.9/Issue/ - Article 10, 1996.
6. History of the Church Missionary Society by Eugene Stocke. Vol. III, London, 1899.

18ம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்திலிருந்து, கப்பலில் அதுவும் சாதாரண கப்பலில் பிரயாணம் பண்ணி இந்தியா வந்து சேர்வது பல மாதங்கள் ஆகும். நினைத்துப் பார்க்க முடியாத பிரயாணமாகும்.

ஒருமுறை போர்ச்சுகல்லிலிருந்து 17 இளந்துறவியர் இந்தியாவில் ஊழியம் செய்ய கப்பல் பிரயாணம் செய்து

வந்தனர் 16 துறவியர் பிரயாணத்தின்போது கடல்நோய் வந்து மரித்து விட்டனர். ஒரே ஒரு துறவி மட்டும் தப்பிப்பிழைத்து இந்தியா வந்து இராமநாதபுரத்தில் ஊழியம் செய்து ரத்த சாட்சியாய் மரித்தார். அவர்தான் பிரிட்டோ என்ற அருளானந்தர். அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல சென்னை வரை நடந்து திரிந்து ஆயிரக்கணக்கான மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்ததாக வரலாறு கூறுகின்றது.

கடல் பிரயானம் எப்படி இருக்கும் என்பதை விளக்கவே மேற்கூறிய சரித்திர சான்றை முன் வைத்தோம். வசதி மிகுந்த குடும்பத்தில் பிறந்த ஹீபர் ஒரு சிறந்த கல்வியாளர். ஊழியம் செய்யும் குடும்ப பாரம்பரியம் கொண்டவர். இயேசு கிறிஸ்துவின் அழைப்பை உணர்ந்த ஹீபர் தனக்கு இலாபமாய் இருந்தவைகளை உதவித்தள்ளி, இந்திய மக்களை நேசித்து பாரத தேசம் நோக்கி நெடும்பயணம் செய்து ஏராளமான ஆத்துமாக்களை தேவன் பக்கம் கொண்டு வந்தார். இடது கைக்கும், வலது கைக்கும் வித்தியாசம் தெரியாத எளிய இந்திய மக்களை நேசித்து அவர்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டுமே என ஏங்கினார். இங்கிலாந்திலிருந்து இந்தியா வந்து ஓய்வெடுத்தார் என்றோ, கோடை வாசஸ்தலத்தில் தங்கினார் என்றோ அவர் வரலாற்றில் காண முடியவில்லை. ஊழியங்களை அசதியாய் அல்ல, அயராது முறுமுறுக்காது முழு மூச்சுடன் செய்தார்.

நற்செய்தி அறிவித்தலும், மிஷனெரி ஊழியமுமே திருச்சபையின் உயிரோட்டத்தை நிர்ணயிக்கும் அளவு கோலாகும். இந்தியாவில் அவர் ஊழியம் செய்த காலங்கள் இரண்டரை (30மாதங்கள்) ஆண்டுகள் மட்டுமே. ஆயினும்

அந்த குறுகிய காலத்திற்குள் கொல்கத்தா தொடங்கி இந்தியாவின் பால பாகங்களுக்கும் சென்று ஊழியம் செய்தார். கண்மூடிப் பழக்கங்கள் ஒழிய, கல்லாமை இருள் அகல, கல்விக் கூடங்கள் பல நிறுவினார். சிறப்பாக செயல்பட வழிவகுத்தார். சபைபாகுபாடுகளை மறந்து கிறிஸ்துவே சபைக்கு தலைவர் சபைகள் சரீரத்தின் உறுப்புகள் என்ற உண்மையை உணரச்செய்து ஒற்றுமைப்படுத்தினார். நீண்ட பணயம் செய்து செலவை பொருள்படுத்தாமல் செலவு செய்து காயங்களை எண்ணாது போர்புரிந்து இளைப்பாறுதலை விரும்பாமல், உழைத்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினேன் என்ற உணர்வேயன்றி வேறு எந்த சன்மானத்தையும் விரும்பாமல் தேவனுக்காக உழைத்து நல்லபோராட்டத்தை போராடினேன். ஓட்டத்தை முடித்தேன். விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. 2தீமோ. 4:7,8 என்று கூறின பவுலைப்போல திருச்சி பட்டணத்திற்கு வந்து ஊழியம் செய்து இமைப்பொழுதில் "விண்ணகத்திற்கு சென்று" பயணத்தை முடித்தார் அல்லேலூயா.

பிஷப் ஹீபர் நமக்கு ஒரு மாதிரியாக வாழ்ந்து விட்டு சென்றார். அவர் விட்டுச்சென்ற பணியை நாமும் தொடர்ந்து செய்வோம். தினமும் ஜெபிப்போம். ஊழியத்தை தாங்குவோம். ஊழியர்களை பாரதத்திற்குள் அனுப்புவோம்.

உனக்காக நான் மரித்தேனே எனக்காக
நீ என்ன செய்தாய்? என்ன செய்து கொண்டிருக்கிறாய்?
என்ன செய்யப்போகிறாய்?

சிந்திப்போம் - செயல்படுவோம் வார்த்தையினாலும் வாழ்க்கையினாலும் கிறிஸ்துவை பிறருக்கு காண்பிப்போமா?

கல்வாரி மலைமேல் கொழுத்தின தீபம்
பல நூற்றாண்டாய் எரிகின்ற தீபம்
இன்றும் நாளையும் எரிகின்ற தீபம்
அணையாமல் நாங்கள் காத்திடுவோம் - அது
தலைமுறைதோறும் நிலைத்திருக்கும்

குறிப்பு.

பிஷப் ஹீபர் பற்றிய மேலும் முக்கியமான ஆதாரப்பூர்வமான தகவல்களைதர

தொடர்பு: Dr.J. **செல்லப்பா Ph:9443148020**

சிறுப்பிள்ளைகள் எப்படி நடக்க வேண்டும்?

வாலிபர்கள் தங்கள் கல்லூரி காலங்களை எப்படி சிந்திக்க வேண்டும்?

நண்பர்களிடம் எப்படி பழக வேண்டும்?

ஒரு குருவானவராக எப்படி வாழ வேண்டும்?

ஹீபர் தன் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களை வைத்து ஒரு புத்தகமே உருவாக்கி இருக்காங்க. உங்கள் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் பிஷப் ஹீபரின் வாழ்க்கைதான், படிச்சிப்பாருங்க. சபை சரித்திரத்தை அறிந்து கொண்டால் தான் சத்தியத்தில் வழி நடக்க ஏதுவாகும்

ஆசிரியர்களை பற்றி...

டாக்டர் லலிதா செல்லப்பா பல அருட்பணியாளர்களின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியவர். அநேக சிறுகதைகளை எழுதியவர், இதழியலில் முதுகலைப் பட்டமும், வாழ்க்கை வரலாறு குறித்த முனைவர் பட்டமும் பெற்றவர். டாக்டர் செல்லப்பா அரசு கல்லூரியில் வேதியியல் பேராசிரியராக பணிபுரிந்தவர். தமிழக நற்செய்தி மாணவர் மன்றத்தில் ஊழியராக பணியாற்றியவர். ஆவிக்குரிய கட்டுரைகள் எழுதுவதில் வல்லவர். பல ஆண்டுகள் தரிசன சுடர் இதழின் ஆசிரியராக பணிபுரிந்தவர். இருவரும் பல எழுத்தாளர் முகாம்களை நடத்திய அனுபவம் பெற்றவர்கள்

மேலும் விபரங்களுக்கு

திருமதி குளோரி செல்லத்துரை
90 M, பொதிகை நகர்,
திருநெல்வேலி 627007
போன் 0462 2551272
செல் 9842182871

Diocesan Offset Press, Palay : 0462 2573182